

# சிவதொண்டன்

**எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்**


மலர் - 86

சுபகிருது வருடம் ஐப்பசி- கார்த்திகை (2022 நவம்பர் -டிசம்பர்)

இதழ் - 11-12






திருச்சிற்றம்பலம்

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

**- மாணிக்கவாசக சுவாமிகள்**

திருச்சிற்றம்பலம்





**பொழிப்புரை :**

தோழியே! திரு அண்ணாமலை அண்ணலது திருவடித் தாமரையைப் போய் வணங்குகின்ற தேவர்களது முடியிலுள்ள இரத்தினங்களின் தொகுதி, ஒளி இழந்தாற்போல கண்களுக்கு நிறையும் சூரியன் தனது கிரணங்களுடன் தோன்றினமையால், இருளானது மறைய நட்சத்திரங்கள் குளிர்ச்சி பொருந்திய ஒளி குன்றி ஒழிய அப்போழ்தில், பெண்ணாகியும், ஆணாகியும், அலியாகியும், விளங்குகின்ற ஒளி பொருந்திய ஆகாயமாகியும் பூமியாகியும் இத்தனைக்கும் வேறுபட்டும் கண்ணால் பருகப்படுகின்ற அமுதமாய் நின்றவனாகிய இறைவனது திருவடியைப் பாடி இப்புது நீரில் வீழ்ந்து ஆடுவாயாக.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவதொண்டன் நிலையம் - யாழ்ப்பாணம்

யாழ். மாநகர ச...
27 FEB 2023
தாபனப்பகுதி

சிவதொண்டன்
உ
சிவமயம்

## அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 06.11.2022<br>04.12.2022 | ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00 மணிமுதல் | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 16.11.2022<br>13.12.2022 | புதன்<br>செவ்வாய் | நண்பகல்<br><br>பிற்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்<br><br>கொழும்புத்துறை<br>செங்கலடி சிவதொண்டன் நிலையம் |

# பொருளடக்கம்

**விடயம்** **பக்கம்**


உனைக் கூறும் வகையென்னே 01
சண்டையிடும் போதும் சலியான் 02
திருவெம்பாவை ஓர் ஆட்கொண்டருளும் விளையாட்டு 08
தியானமாலை தரும் நந்தா இன்பம் 11
சைவத் திருக்கோயில்களில் நிகழும் பூசைகளும் ....... 17
நின்னாவார் பிறரின்றி நீயோனாய் (ஆசிரியர்) 19
நற்சிந்தனை 22
Natchinthnai 23
இரு மொழிகளில் எங்கள் ஆசான் அருள்மொழிகள் 24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
18 MAR 2023
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 86 சுபகிருது வருடம் ஐப்பசி - கார்த்திகை (2022 நவம்பர் - டிசம்பர்) இதழ் : 11 - 12

## உனைக்கூறும் வகையென்னே

பொன்னானாய் மணியானாய் பொருளானாய் பிறவானாய்
என்னானா யென்னானா யிறையானா யெனப்பலவாய்ச்
சொன்னாரன் றியின்னான் எனச்சொன்னா ரிலையுலகில்
அன்னாயுன் னையன்றி யினிப்பின்னார் துணைபேசே

நீரானாய் நிலனானாய் வளியானாய் விசும்பானாய்
காரானாய் கடலானாய் மதியானாய் கதிரானாய்
ஊரானா யுடலானாய் உலகானாய் பலவானாய்
பேராயி ரம்மானாய் எனப்பேசார் பிறர்தானே

பெரிதானாய் சிறிதானாய் பிழையானாய் பித்தானாய்
அரியானாய் அயனானாய் அருளானாய் மருளானாய்
எரியானாய் இரவானாய் பகலானாய் எல்லாமாய்த்
தெரியாதே நின்றாயே யுனைக்கூறும் வகையென்னே

மண்ணானாய் விண்ணானாய் மதியானாய் ரவியானாய்
கண்ணானாய் ஒளியானாய் காட்சியெல்லாம் நீயானாய்
பெண்ணானாய் ஆணானாய் பேதமென்றும் நீயானாய்
என்னானாய் என்னானாய் என்பதல்லால் என்சொல்கேன்

- நற்சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்டையிடும் போதும் சலியான்

**அறிமுகம்**

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனையில் உள்ள ஒரு வாசகமே "சண்டையிடும் போதும் சலியான்" என்பதை அவரது அடியவர்கள் நன்கு அறிவர். இந்த வாசகம் மிகவும் எளிமையானது என்றே பலரும் எண்ணக்கூடும். இங்கு "சண்டையிடும் போதும்" என்ற தொடர் சண்டையிடுகின்ற செயலைச் சிறப்பாக எடுத்துக் கொள்ளும். அதேவேளை ஏனைய செயல்களைச் செய்வது எளிமையானது - சாதரணமானது என்ற கருத்தையும் உள்ளடக்கி இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், ஏனைய செயல்களைச் செய்கின்ற போது மட்டுமன்றிச் சண்டையிடும் போதும் சலியான் எனலாம். சலியான் என்ற வார்த்தை இளைப்பவனல்லன்-களைப்படைபவன் அல்லன் என்ற பொருளைத் தரும். எந்த செயலிலும் சலியாமல் இருப்பதற்கு முதலில் மனம் சலியாதிருத்தல் முன்நிபந்தனையாய் அமைய வேண்டும். மனம் சலியாமல் இருப்பதற்கு புத்தி சலியாமல் இருக்க வேண்டியது அவசியம். எனவே எச்செயலையும் செய்து முடிப் பதற்குப் புத்தி நிலையாக இருக்க வேண்டும். இதனை திட சங்கல்பம் என்பர். ஆங்கிலத்தில் இதனை "வில்பவர்" (WILL POWER) என்று கூறுவர்.

சிவயோக சுவாமிகள் இந்த வாசகத்திலே சண்டையிடுதலைச் சிறப்புச் செயலாக எடுத்துக் கொள்வதற்கு ஏதாவது காரணம் இல்லாமல் போகாது. சாதாரணவாய்ச் சண்டையிலிருந்து மகாயுத்தங்கள் வரை பலவிதமானவற்றையும் சுட்டி நிற்கின்றது. ஏனைய செயல்களில் சலித்துக் கொண்டால் இளைப்பாறிக் கொண்டு மீண்டும் அதனைத் தொடரலாம் அல்லது விட்டுவிடலாம்.

ஆனால் சண்டையில் சலித்தால் பலவிதமான இழப்புக்களைச் சந்திக்க வருவது மட்டுமன்றி எதிரிகளால் உயிர் ஆபத்தும் ஏற்படலாம். இந்த வகையிலே தான் சண்டை சிறப்பாக எடுத்துக் கொள்ளப்பட்டது அன்றிச் சிவயோக சுவாமிகள் சண்டைக்கு ஆதரவானவர் என எண்ணுவது தவறானது. எனவே "சலியாமை" என்ற விடயத்திற்கே அவர் முழு அழுத்தமும் கொடுத்துள்ளார்.

மேலும் சுவாமிகள் தன்னை அண்டி வந்தவர்களுக்கு ஆன்மிக அறிவுரைகளைக் கூறி வந்தாரே தவிர அவர்களைப் போரிட வழிகாட்டினார் அல்லர். வேண்டுமாயின் அதனை ஆன்மிகப் போர் எனலாமே அன்றிச் சமயப்போர் என்று எண்ணி விடக்கூடாது. ஆன்மிகப் போர் என்பது தன்னையே வெல்வதற்காகத் தன்னுடன் செய்யும் போராகும். இங்கு தன்னைத் தானே அறிவதை ஏன் சண்டை என்று கூற வேண்டும் என்ற வினா எழுமன்றோ? அதாவது, ஏனைய சண்டைகளுக்கும் ஆன்மிகச் சண்டைக்கும் பொதுவான பண்புகள் இருக்கின்றனவா?

**பொதுப் பண்பு**

ஒரு சண்டை நடைபெறின் இரு பகுதியினர் இருப்பர். முதலில் இரண்டு நாடுகளுக்கு இடையே நடக்கும் ஒரு சண்டையை எடுத்துக் கொள்வோம். அதில் உள்ள இருபகுதியினரும் தாம் சண்டையில் ஈடுபடுவதை நியாயப்படுத்துவர். அந்த நியாயங்களில் உண்மை இருக்கலாம். ஆனால், அச் சண்டையில் ஒரு நாடு இறுதியில் வெற்றியடையும், மற்ற நாடு தோல்வி அடையும். வெற்றியடையும் நாடு தோற்ற நாட்டின் நிலப்பரப்பு, ஆட்கள், செல்வங்கள், பொருள்கள் என்பவற்றைக் கவர்ந்து கொள்ளும். அது மட்டுமன்றி அந்நாட்டின் பெண்கள் கெடுக்கப்படுவார்கள். அதன் நாகரிகச் சின்னங்கள், பண்பாடு என்பனவும் அழிக்கப்படும். வெற்றி கொள்ளும் நாடு இவ்வாறு பல நலன்களைப் பெற்றுக் கொள்ளும். இரு நாடுகளும் சண்டையில் ஈடுபட என்ன நியாயங்களைக் கூறியிருந்தாலும் உண்மையில் மற்ற நாட்டின் வளங்களைத் தமது ஆக்கிக் கொள்வதே பிரதான நோக்கமாக இருக்கும். ஆனால் தோற்ற நாடு தான் இழந்தவற்றைப் பெற மற்ற நாடு தனக்குச் செய்த அநியாயங்களைக் காட்டி மீண்டும் சண்டைக்குச் செல்லும். அதன் நோக்கமும் இழந்த வளங்களையும் வேறு வளங்களையும் பெறுவதாகவே இருக்கும். இவ்வாறு தான் மனித வரலாறு முழுவதும் சண்டை தொடர்ந்து நிலவி வருவதை நாம் காண்கிறோம்.

இனி, இரண்டு வியாபாரங்களுக்கு இடையே நடக்கும் ஒரு சண்டையை எடுத்துக் கொள்வோம். வியாபார நிறுவனங்கள் தமது சண்டைக்கு வியாபாரத் தத்துவங்கள், கோட்பாடுகளைப் பயன்படுத்துவதில்லை. அந்த வியாபாரத் தத்துவங்களை மாணவர்கள் தான் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பட்டம் பெறப் பயன்படுத்துகின்றார்கள். ஆனால் வியாபார நிறுவனங்கள் போர்த்தளபதிகள், தலைவர்கள் தமது யுத்த அனுபவங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு எழுதிய போர்த் தந்திரங்கள், கோட்பாடுகளைத் தான் பயன்படுத்தி வருகின்றமையானது பலருக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடும். நாடுகளுக்கிடையே நடக்கும் சண்டையில் ஒரு நாடு மற்ற நாட்டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளங்களைப் பெறுவதைக் காண்கிறோம். இதே போல் ஒரு வியாபாரம் மற்ற வியாபாரத்தின் வளங்களைப் பெறுவதற்காகவே சண்டையிடுகிறது. எந்த நிறுவனம் கூடுதலான வாடிக்கையாளர்களைப் பெறுகிறதோ அது சண்டையில் வெற்றி பெறும். நாட்டுச் சண்டையில் நிலப்பரப்புப் போல வியாபாரச் சண்டையில் வாடிக்கையாளர்களின் மனங்கள் மற்ற நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகிறது.

அந்த மனங்களையே ஒரு வியாபாரம் தனதாக்கிக் கொண்டால் அம்மனங்களை உடைய மனிதரின் வருமானங்கள், சொத்துக்கள், செல்வங்கள் என்ப வற்றைப்பெறலாம். அச்சண்டையில் தோல்வி அடையும் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களை மட்டுமன்றித் தான் பெற்றிருந்த புகழ், தனது அடையாளங்கள், குறியீடுகள், நிறுவனப் பண்பாடு, தனது திறமையான தொழிலாளர்கள் முதலானவற்றையும் இழக்க வேண்டி நேரிடும். இவற்றை விளக்கும் ஒரு நூலின் பெயர் வாடிக்கையாளரின் "மனத்துக்கான சண்டை" (BATTLE FOR THE MIND) என்பதாகும்.

அடுத்து, ஆன்மிக யுத்தத்திற்கு வருவோம். ஆன்மா தனது நிலப்பரப்பு என்ற அறிவுப் புலத்தை எதிரிகளிடம் பறிகொடுத்துவிட்டது. அது அதனை திரும்பப் பெற அவ்வெதிரிகளை வெற்றி கொள்ள வேண்டியுள்ளது. அந்த அறிவுப் புலம் ஆன்மிக சாதகரின் மனமே. ஐம்புலன்கள் சாதகனின் எதிரிகள். அந்த ஐம்புலன்கள் அவனைத் தனது சொந்த அறிவால் அறிகின்ற நிலையான வளங்களைப் பெற விடாது நிலையற்ற பொருட்களின்பால் இழுத்துச் செல்கின்றன. அவன் அறிவை இழந்து அறியாமையைப் பெற்றதால் அந்த அறியாமையோடு கூடிய காமம், கோபம், மயக்கம் முதலான எதிரிகளோடும் சண்டையிட வேண்டி உள்ளது. எனவே போருக்குரிய பொதுப்பண்பு எதிரியிடமிருந்து வளங்களைப் பெறுவதே. ஆன்மிகச் சண்டையை ஒருவர் தனக்குள் தானே நடாத்திக் கொள்ளும் அகரீதியான சண்டை எனலாம். ஏனையவற்றை புற ரீதியான சண்டை என ஓரளவு பிரித்துக் காட்டலாம். எனினும் அவையும் முதலில் மனித மனங்களிலேயே உருவாகிப் பின் புற உலகில் நடைபெறுகின்றன. இதனாலேதான் ஜவகர்லால் நேரு "யுத்தம் மனித மனங்களில் தோன்றுவதால் அதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் புற நடவடிக்கைகளால் அன்றி அம்மனங்களாலேயே முடியும்" என்று கூறினார். இதுகாறும் கூறிய வற்றிலிருந்து ஆன்மிகச் சண்டைக்கும் ஏனைய சண்டைகளுக்கும் இடையே பொதுவான பண்புகள் இருப்பதைக் கண்டு கொள்ள முடியும். ஆனால் ஏனைய சண்டைகளை ஒருபோதும் தீர்த்து விட முடியாது. அது மனிதனைத் தொடர்ந்து கொண்டே வருகிறது. ஆனால் ஆன்மிகச் சண்டையில் ஒருவர் வெற்றி பெற்றால் அவ்வெற்றி அவருக்கான நிரந்தர வெற்றி மட்டுமன்றி ஏனைய சண்டைகளை அவர் வெற்றி கொள்வதையும் இலகுவாக்கும். இந்த வகையில் ஆன்மிக யுத்தம் ஏனைய யுத்தங்களை விட மிக உயர்வானதே.

**போர்களில் உயர்ந்தது**

வரலாற்றில் போர்களினால் மிகப்பெரிய சாம்ராச்சியங்களும், பெரிய நாகரிகங்களும் உருவாக்கப் பட்டு வந்திருப்பதை நாம் அறிகிறோம். ஆனால் அவற்றில் ஒன்றேனும் நிலைத்திருக்கவில்லை. எனினும் ஆன்மிகப்போர் என்றும் அழியாத வெற்றியைத் தரும். அவ்வாறு பெறப்பட்ட வெற்றியை வேறெவரும் பற்றிக் கொள்ள முடியாது. ஆனால் ஆன்மிக வெற்றி அடைந்த ஒருவர் ஏனைய வெற்றிகளைப் பெறுவது இலகு. இதனை விளக்க இரண்டு சம்பவங்களை எடுத்துக் காட்டலாம்.

புத்தர் பெருமான் ஆன்மிகப் போரில் தன்னைத் தானே வென்ற ஒரு வீர புருசர். அவர் சந்நியாசவாழ்க்கை வாழ்கின்றவர். ஒரே தெருவில் அவர் மறுபடியும் அடுத்த நாள் பிச்சைக்குச் செல்வது இல்லை. ஒரு நாள் அவ்வாறு ஒருருக்குப் பிச்சை எடுப்பதற்காக வேறு ஓர் ஊருக்கூடாக சென்று கொண்டு இருந்தார். அப்போது அவரைக் கண்ட பிராமணன் தகாத வார்த்தைகளால் அவரைத் தூற்றிக் கொண்டு பின்சென்றான். தனது ஊர் எல்லையை அடையும் போது அவன் தனது தூற்றுதலை நிறுத்திக் கொண்டான். அது கண்ட புத்தர் அவனைத் திரும்பிப் பார்த்து மேல்வருமாறு கூறினார்: "நான் இன்று மதியமே இவ்வழியில் திரும்பி வருவேன். நீர் மேலும் உன்னைத் தயார்படுத்திக் கொண்டு என்னைத் தூற்றலாம்." இதனைச் செவிமடுத்த அப்பிராமணன் அவரது சாந்த சொரூபத்தைக் கண்டு அவரிடம் பணிவாக "நான் உங்களைத் தொடர்ந்து தூற்றி வந்தபோதும் எப்படி நீங்கள் சலனமடையாமல் இருக்கின்றீர்கள்" என்று வினாவினான். அதற்குப் புத்தர் "நீர் ஒரு பிச்சைக்காரனுக்குப் பிச்சை வழங்க அவன் அதனை ஏற்காது விட்டால் என்ன செய்வீர்" என்று அவனைத் திருப்பிக் கேட்டார். அவன் "நான் அதனை எடுத்துக் கொள்வேன்" என்றான். புத்தர் "நானும் அதே போல் உனது தூற்றலை ஏற்றுக் கொள்ளவில்லை" என்றார். இதனைக் கேட்ட அவன் மனம் மாறித் திருந்தியவனானான். தன்னைத் தானே வென்ற புத்தர் தனது எதிரியான பிராமணனை மிக இலகுவாக வென்று விடுகின்றார். அத்துடன் அவர் சலியாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை செய்தவரும் ஆகின்றார்.

சுமார் இரண்டாயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் கிரேக்க தேசத்தில் நடந்த சண்டை ஒன்றில் சோக்கிரதரும் கலந்து போரிட்டுக் கொண்டு இருந்தார். கிரேக்க தேசத்தவருள் சோக்கிரதர் தான் சிறந்த அறிவாளி என்று டெல்பி தலத்தின் தெய்வமே கூறும் அளவுக்கு அவர் தன்னைத் தானே வென்ற ஒரு மகாஞானி. அவரது யுத்த ஆற்றலுக்கு எதிரிகள் பின்வாங்குகின்றனர். அதேவேளை சற்றுத் தூரத்தில் தனது அணியில் ஒருவன் எதிரிகளின் செயல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாது தளர்வதை சோக்கிரதர் கண்டார். உடனே அவர் அவனுக்கு உதவி செய்து எதிரிகளைப் புறமுதுகு காட்டி ஓட வைக்கிறார். அத்துடன், இரவுக்காலமாக வீரர்கள் தத்தமது பாசறைக்குத் திரும்பினர். அங்கு ஏனைய வீரர்களை புறமுதுகு காட்டி ஓட வைத்தது குறித்த அப் போர்வீரனே என்று அவனை மெச்சிப் புகழ்ந்து பாராட்டினார்கள். அவர்கள் அச்சாதனையைச் செய்தவர் சோக்கிரதரே என்பதை அறிந்திருக்கவில்லை. ஆனால், அங்கு பிரசன்னமாயிருந்த சுயநலம் சற்றுமில்லாத சோக்கிரதரோ அச் சாதனையைச் செய்ததென உரிமை கோரினார் அல்லர். அது மட்டுமன்றி மற்ற வீரர்களோடு தானும் சேர்ந்து அதே வீரனைப் புகழ்ந்து பாராட்டினார். சற்று நேரத்தின் பின் எல்லா வீரர்களும் உறங்கச் சென்றனர். சோக்கிரதரோ அந்த அறையின் சுவர் அருகில் எதனையோ ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார். மறுநாள் காலை சுவர் அருகில் விடியும் வரை சிந்தனையில் ஆழ்ந்து மூழ்கியிருந்த சோக்கிரதர் ஏனைய வீரர்களோடு சேர்ந்து போரிடச் சென்றார். தன்னைத்தான் வென்ற சோக்கிரதரின் நிலையும் சலியாத நிலையே. இதனாலேயே ஏனைய சண்டைகளை விட தன்னோடு தான் செய்யும் போரே மிக உயர்ந்தது.

**தத்துவம்**

சிவயோக சுவாமிகள் தனது இவ்வாசகத்தில் ஒரு மாபெரும் தத்துவத்தை மிக எளிதாகக் கூறி விடுகின்றார். அதுவே சலியாமை பற்றிய தத்துவம். அத் தத்துவத்தைக் கொண்டு ஆன்மிக சாதகன் வீடுபேறு என்ற தனது இலக்கினை அடைய முடியும். அத்துடன் உலகியலில் உள்ளவர்கள் கூட இத் தத்துவத்தைப் பயன்படுத்தி உலகியல் குறிக்கோள்களை நிறைவேற்ற முடியும். இதற்கு உதாரணமாக அல்வா எடிசன் மின்குமிழைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பல நூறு தடவைகள் தோல்வியையே தழுவியிருந்தார். அதனால் அவர் சலித்து விடவில்லை. அவர் சலியாது முயன்று வெற்றி பெற்றதனாலேயே அவர் கண்டுபிடித்த மின்குமிழைக் கொண்டு முழு உலகுமே இரவையும் பகலாக்கி மிளிர்கிறது. கல்லூரிகளில் சில மாணவர்கள் வெற்றி பெறுவதற்கும் சலியாமை என்ற அத் தத்துவமே பிரதான காரணமாக இருந்து வருகின்றது.

சலியாமை என்பது மனிதனிடமுள்ள ஓர் ஆற்றலே. இதனைத் திருவள்ளுவர் "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு", "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்ற தனது குறள்களில் நோற்றல் என்ற தவ ஆற்றலிலும், திண்ணியர் என்பதிலுள்ள திண்மை-திடம் என்ற ஆற்றலிலும் சலியாமை என்ற தத்துவத்தைப் பயன்படுத்தியிருத்தலைக் கண்டு கொள்ளலாம்.

மேலும், சலியாமை என்ற தத்துவத்தைக் குமரகுருபர சுவாமிகள் மேல்வருமாறு தனது நீதிநெறி விளக்கம் என்ற நூலில் மிக அழகாகச் சித்திரித்திருப்பதைக் காணலாம்:

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்
செவ்வி அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார் கருமமே
கண்ணாயினார்."

பகவக்கீதை சலியாமையை ஸ்திதப் பிரக்ஞை என்று கூறும். ஸ்திதப் பிரக்ஞையின் பண்புகளை கீதை இரண்டாம் அத்தியாயத்திலுள்ள 55 முதல் 72 வரையில் உள்ள சுலோகங்களில் தொகுத்துத் தருகிறது. அவையாவன: ஆசையின்மை, ஆத்ம திருப்தி, இன்ப விருப்பும் துன்ப வெறுப்பும் இல்லாமை, பயம்-கோபம் என்பன இல்லாமை, பற்றின்மை, புலனடக்கம், பொருட்களிலுள்ள சுவையையும் நாடாமை, இந்திரியங்கள் மனதைத் தம்வசம் இழுக்க விடாமை, தெய்வசிந்தனை, பற்று - ஆசை - கோபம் - மோகம் - ஞாபகமறதி-புத்திநாசம் என்ற ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்து வரும் இலக்கை அடைய முடியாத நிலைக்கு இடம் கொடாமை, உள்ளத் தெளிவோடு இந்திரியங்களைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துவது, தடுமாற்றம் இல்லாத புத்தி, விவேகம், ஆன்ம சிந்தனை, மன அமைதி, சுகம், இரவு - பகலின்மை, ஆசைகள் அநேகம் வந்தாலும் அமைதி குலையாமை, நான் - எனது என்னும் அகப்புறப் பற்றுக்கள் இல்லாமை என்பனவாம். இவ்வாறு இவற்றை மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டாலும் கீதையில் உள்ள இப்பகுதியே எஞ்சியுள்ள கீதையின் பகுதிகளோடு ஒப்பிடுகையில் மிக உயர்ந்ததெனப் பலராலும் போற்றப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தத்துவத்தில் இருந்து செயல்முறைக்கு**

சலியாமை என்ற தத்துவம் கோட்பாடு. இலக்கை அடைய அதனைப் பயன்படுத்துவது நடைமுறையாகும். அர்ச்சுனன் காற்றை அடக்குவது போல மனத்தை அடக்குவது மிகவும் கடினம் என்றான். மேலும் அது சஞ்சலம் உடையது கலக்கத்தைச் செய்வது வலிமை உடையது அடக்க முடியாதது என்று தான் நினைப்பதாகவும் கூறினான். அதற்குக் கிருஷ்ணன் நீ கூறுபவை உண்மையாய் இருப்பினும் மனத்தைப் பயிற்சியாலும் வைராக்கியத்தினாலும் அடக்க முடியும் என்று பதிலளித்தான். இதே போல பதஞ்சலி யோக சூத்திரமும் சித்த விருத்தியை நிறுத்துவது யோகம் என்றும், அதனை அடையப் பயிற்சியும், வைராக்கியமும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. எனவே, ஆன்மிக நூல்கள் சாதனையை மேற்கொள்ளச் சிறந்த வழி வைராக்கியமும் பயிற்சியும் என்று கூறுவதால் அவற்றின் பயனும், பெருமையும் உயர்வானவை என்பதனை உணர முடிகிறது. இதனால் பயிற்சி, வைராக்கியம் என்ற இரண்டையும் முதலில் தெளிவாய்ச் சந்தேகங்களுக்கிடமின்றி தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். இதற்கும் முதல் மனத்தைச் சலிக்கப் பண்ணுபவை அல்லது சஞ்சலப்படுத்துபவை எவை என்பதைக் கண்டு கொள்ள வேண்டும். பதஞ்சலி முனிவர் சரியான அறிவு, ஒன்றை மற்றதாகக் காணும் பிழையான அறிவு, அர்த்தமற்ற வார்த்தைகளால் வரும் மயக்கம், தூக்கம், ஞாபகம் என்னும் ஐந்துமே மனத்தைச் சஞ்சலப்படுத்தும் என்பர்.

காட்சி, அனுமானம், ஆகமம் என்ற மூன்று அளவீடுகளின் துணை கொண்டு அறிவது சரியான அறிவு. உண்மையான உருவத்திற்கும் போலி உருவத்திற்கும் வேறுபாடு உணர முடியாத நிலை திரிபு. வெறும் வார்த்தைகளிலிருந்து எந்த அனுபவமோ உணர்வோ பெற முடியாத நிலை மயக்கம். அறிவதற்கு எதுவும் இல்லை என்பதை உணரும் போது உண்டாகும் உணர்வு நிலையே தூக்கம். முன்பு அனுபவித்த ஒரு விடயம் மீண்டும் மனதில் தோன்றுவது ஞாபகம். இந்த ஐந்து வகையான மனச் சஞ்சலங்களை நீக்கிச் சலியாமையைப் பெறவே பயிற்சியும், வைராக்கியமும் பயன்படுகின்றன. இதனால் எவ்வித இலக்காக இருந்தாலும் அப்பியாசம், வைராக்கியம் என்னும் இரண்டையும் பற்றி தெளிவாக அறிந்து கொண்ட பின்பே அவற்றின் வழிகளில் சென்று முன்னேறிச் செல்வதற்கு ஆரம்பிக்க வேண்டும்.

**பயிற்சி அல்லது அப்பியாசம்**

ஒருவன் தனது இலக்கில் முன்னேறிச் செல்ல அதற்காகத் தான் தெரிவு செய்யும் வழி அல்லது வழிகளில் பூரண நம்பிக்கை வைத்துக் கொண்டு இடையீடின்றி நீண்ட காலம் தொடர்ந்து முயல்வதில் உறுதியாக இருப்பது அப்பியாசம் அல்லது பயிற்சி எனப்படும். ஒருவன் பயிற்சியினால் பலன் அடைய வேண்டுமாயின் அவன் தான் தெரிவு செய்யும் வழியில் உறுதியாக நிற்பதற்கு மூன்று நிபந்தனைகளைத் திருப்தி செய்திருக்க வேண்டும். அவையாவன (1) பயிற்சியை நீண்ட காலம் தொடர்வது (2) அதனை விட்டு விட்டு திரும்ப திரும்பச் செய்யாமை (3) பூரண நம்பிக்கையும் விசுவாசமும் வைத்திருப்பது என்பனவே. ஒருவன் தனது இலக்கை அடையும் பாதையில் எண்ணற்ற இடையூறுகளும் தோல்விகளும் நிகழக்கூடும் என்ப தனாலேயே இந்த மூன்று நிபந்தனைகளையும் திருப்தி செய்து கொள்வது அத்தியாவசியமாகிறது.

பொதுவாக இலக்கை அடைய முயலும் சாதகர்கள் அதனால் வரக் கூடிய நலன்களை நினைந்து ஆரம்பத்தில் கிளர்ச்சியும், நம்பிக்கையும் கொள்கிறார்கள். அதற்கு இணங்க குறுகிய காலத்தில் இலக்கை அடையலாம் என்று கருதி அது முடியாமையால் பலர் அதனை இடையிடையே விட்டு விடுகின்றனர். இதனால் ஒரு சிலர் மட்டுமே நீண்ட காலம் அந்த வழியில் செல்லத் தகுதி பெறுகின்றார்கள். அதனைத் தொடரக்கூடிய தைரியமும், விடாமுயற்சியும் ஒரு சிலரிடம் மட்டுமே காணப்படுகின்றன. ஏனையவர்கள் தமக்கு அதனை வாய்ப்பான சூழ்நிலைகள் சாதகமாக இல்லை என்று தகுந்த சூழ்நிலையை எதிர்பார்ப்பதாக எண்ணித் தம்மையே ஏமாற்றிக் கொள்கிறார்கள். இவ்வாறு பலர் அம்முயற்சியை அடுத்து வரும் பிறவிகளில் பார்த்துக் கொள்ளலாம் என்று பிற்போடுகிறார்கள். முயற்சி செய்ய முனையும் சிலரின் பழவினைகள் அவர்களது பாதையில் இடையூறுகளாக வந்து அமைவதும் உண்டு.

ஆனால் பெரும்பாலானவர்கள் பயிற்சியை இடையிலே விட்டுவிடுவதற்குக் காரணம் ஆன்மிக முதிர்ச்சி இன்மையே. அம்முதிர்ச்சி போதிய அளவு இல்லாவிடின் யோக வழியில் சென்று வெற்றியடைய முடியாது. அப்படியானவர்களுக்கு உலக இன்பங்கள் கவர்ச்சி உள்ளனவாயே இருக்கும். யோகவழியில் செல்லும்போது அதற்கு வேண்டிய தியாகங்களைச் செய்ய அவர்கள் தயாராக இருக்க மாட்டார்கள். யோக வழியில் சென்று வெற்றிபெற சாதகன் தனது பழக்கங்கள் சிலவற்றையும், மனத்தையும் மாற்றினால் மட்டுமே தொடர்ந்து நீண்ட காலம் பயிற்சி செய்து, அப் பயிற்சியைப் பூரணப்படுத்த முடியும். அதற்கு எவ்வளவு காலம் செல்லும் என்பதைப் பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. அவையாவன: சாதகனின் ஆன்மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதிர்ச்சியின் அளவு, முற்பிறவிகளில் செய்த சாதனை யின் அளவு, இப்பிறவியில் அவன் செய்துள்ள சாதனை யின் அளவு என்பனவாகும். ஆனால் சாதகன் தன்னைப் பூரணமாக இறைவனிடம் ஒப்படைத்துச் சரணடைய முடியுமாயின் மிகவிரைவில் சமாதியை அடைந்துவிடலாம். இதனால்தான் சாதகன் முற்பிறவி களில் சாதனை செய்திருக்க வேண்டியதும் அவசிய மாக இருக்கின்றது. இதனால் ஒரு சாதகன் இலக்கை அடைய எவ்வளவு நீண்டகாலம் எடுக்கும் என்பது முன் கூட்டியே கூறக்கூடிய ஒரு விடயம் அன்று, அக் காலம் பல பிறவிகளைக் கொண்டதாயும் இருக்கலாம். எனவே சாதகன் தனது குறிக்கோளை அடையத் தொடர்ச்சியாக நீண்டகாலம் முயற்சியை விடாது தொடர்வதற்குத் தயாரனவனாய் இருக்க வேண்டியது அவசியம். இன்னும், தான் சமாதி அடையவில்லையே என்று விரக்தி அடைவது நியாயம் அன்று.

காலம் தொடர்பாக ஒரு கதையை இங்கு ஞாபகத்தில் வைத்துக்கொள்வது பயனுடையது ஆகும். ஒருசமயம் நாரதர் ஒரு காட்டு வழியாகப்போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு கறையான் புற்றில் இருந்து ஒரு குரல் வரு வதைக்கேட்டார். அக்குரல் சுவாமி நீங்கள் எங்கே போய்க்கொண்டு இருக்கின்றீர்கள் எனக்கேட்டது. அதற்கு நாரதர் சிவனைத் தரிசிக்கச் சிவலோகம் போவதாகக் கூறினார். உடனே அக்குரல், சிவன் தனக்கு முத்திதர எவ்வளவு காலம் பயிற்சியைத் தொடரவேண்டும் என அவரிடம் கேட்டுவந்து சொல்ல முடியுமா என்றது. அதற்கு நாரதர் முடியும் என்று கூறிவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தார். அவர் சென்று கொண்டிருக்கும்போது வழியில் பக்தி யோடு ஒருவன் சிவனை ஆடிப்பாடித் தொழுது கொண்டிருந்தான். அவனும் சிவன் தனக்கு எப்போ முத்திதர உள்ளார் என்று கேட்டுவரமுடியுமா என நாரதரைப் பணிவாகக் கேட்டான். அதற்கு அவர் சாதகமாகப் பதில் அளித்துவிட்டுத் தனது பயணத்தைத் தொடர்ந்தார். சில ஆண்டுகளின் பின் அவர் மீண்டும் அவ்வழியே வந்து கொண்டிருந்தார். கறையான் புற்றால் மூடியிருந்த சாதகன் அவரைக் கண்டதும் சிவன் தனக்கு எப்போ முத்திதரக்காத்திருக் கின்றார் என்றான். அதற்கு நாரதர் இன்னும் மூன்று பிறவிகள் சாதனை செய்யவேண்டும் எனச் சிவன் கூறியதாகத் தெரிவித்தார். அதனைக் கேட்டதும் அவன் மூன்று பிறவிகளிலா? நான் என்னைப் புற்று மூடிய பின்னும் தொடர்ந்து சாதனை செய்து வருகிறேன் என்று சலித்துக் கொண்டான். சற்றுத்தூரம் சென்றதும் அந்தப் பக்தன் நாரதரிடம் சிவன் தனக்கு ஏதாவது செய்தி தெரிவித்தாரா என்று வினாவினான். அதற்கு நாரதர் அவன் முன்நின்ற புளியமரத்தைக் காட்டி அதில் எவ்வளவு இலைகள் இருக்கின்றனவோ அவ்வளவுகாலம் செல்லும் எனத்தெரிவித்ததாகக் கூறி னார். உடனே அவன் மகிழ்ந்து பரமசிவன் இவ்வளவு காலம் மட்டும் சாதனை செய் என்று கூறினாரே. அவருக்கும், உமக்கும் நன்றி என்று கூறிக்கொண்டு அதிக மகிழ்ச்சியோடு சிவனைப் ஆடிப்பாடி தொழுது கொண்டு இருந்தான். நாரதர் தனது பயணத்தைத் தொடர்ந்தார்.

சற்று நேரத்தில் ஒரு தேரோடு சிவகணங்கள் வந்து அச்சாதகனைச் சிவலோகம் அழைத்து வரும்படி சிவன் தம்மை அனுப்பியதாகத் தெரிவித்தனர். இந்தப் புளியமரத்திலுள்ள இலைகள் எவ்வளவோ அவ்வளவு ஆண்டுகள் சாதனை செய்ய வேண்டுமென்றே நாரதர் தெரிவித்ததை அவர்களிடம் கூறினான். உடனே சிவகணங்கள் உம்மைச் சோதிக்கவே சுவாமி அவ்வாறு கூறியிருந்தார் என்றனர். ஆனால் உமது சலியாமையை அறிந்ததும் அவர் உம்மை அழைத்து வருமாறு கூறினார் என அவனை அவர்கள் சிவலோகம் கூட்டிச் சென்றனர்.

அடுத்த நிபந்தனை பயிற்சியை இடையிலே நிறுத்தாமை ஆகும். மனம் வெவ்வேறு தளங்களில் பயிற்சியின் போது செல்லவேண்டி உள்ளது. இதனால் அவ்வத்தளங்களிற் சில மாற்றங்களைச் செய்ய வேண்டி வரும். அவ்வாறான மாற்றங்களைச் செய்யாவிடின் அவை பயிற்சியைத் தொடரமுடியாத இடையூறுகளாகி விடும். பயிற்சியில் அதுவரை ஏற்பட்ட முன்னேற்றத்தின் பலன் மட்டுமன்றி அதற்காகச் செலவிட்ட முயற்சியும் காலமும் வீணானதாய்விடும். உதாரணமாக ஒரு சாத கன் தனது நீண்டநாள் தேங்கியுள்ள மனமாசுக்களை அகற்ற வேண்டுமாயின் தூய்மையற்ற எண்ணங்களை யும் ,உணர்வுகளையும் நீக்கிச்சுத்தம் செய்ய வேண்டிய வன் ஆவான். அவ்வாறு எழும் தூய்மையற்ற எண்ணங் களையும் உணர்வுகளையும் நீக்கி அதே இடத்தில் தூ ய்மையான எண்ணங்களையும் உணர்வுகளையும் நிலை நாட்டச் சில காலங்களும், முயற்சியும் வேண்டும். ஆனால், அவன் பயிற்சியை இடைவிடாது செய்தால் மட்டுமே தடித்தமன அலைகளை நீக்கி அந்த இடத்தில் நல்ல சூக்கும மன அலைகளை உருவாக்கலாம். எனவே இவற்றைச் செய்து மாற்றங்களைக் கொண்டுவரும் ஆற்றல் அவனிடம் இல்லாவிடின் பயிற்சியை இடை நடுவில் கைவிட நேரிடும். ஆனால் பயிற்சியே செய்யா மல்இருப்பதைக்காட்டிலும்அதனைவிட்டுவிட்டுச்செய்வது கூட நல்லதே. அதனைக்கொண்டு சாதகமான சம்ஸ்காரங் களை உருவாக்கி அடுத்துவரும் பிறவிகளில் பயிற்சியை இடைவிடாது மேற்கொண்டு இலக்கை அடைய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாது நிபந்தனை, இறைபக்தியோடும் உற்சாகத் தோடும் கூடிய மனப்பாங்கு பயிற்சிக்கு அவசியம். தன்னைப் பூரணமாகப் பயிற்சிக்கு ஒருவன் அர்ப்பணிக்காது பல்வேறு முயற்சிகளோடு பயிற்சியை யும் செய்வானாயின் பயிற்சியை இடைவிடாது செய்ய முடியாது போகும். எனவே ஒரு சாதகன் யோகப்பயிற்சியைப் பொழுது போக்குக்கான ஒரு வழி என்ற மனப்பாங்கோடு மேற் கொள்ளாது அதற்கு வேண்டிய காலத்தையும் முயற்சியையும் வழங்கத் தயாராக இருக்க வேண்டும். எனவே முத்தி என்னும் மிக உயர்ந்த இலக்கை மறவாது அவன் பயிற்சியில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

சித்தவிருத்திகளை முற்றாக நிறுத்துவதற்கு அவசியமான விடயங்கள் இரண்டில் இரண்டாவது வைராக்கியம் ஆகும். வைராக்கியம் என்பது ஏதாவது பொருளில் இருந்து பெறக்கூடிய இன்பத்தில் கவர்ச்சி கொள்ளாது இருத்தலாம். இந்தக்கவர்ச்சி இன்பதுன்பங் கள் இரண்டுக்கும் பொதுவனதாகும். இன்பமும் துன்பமும் இரட்டைகள் என்பர். ஒரு பொருளை நாடுவதால் பெறும் இன்பம் போன்றதே இன்னொரு பொருளை விலக்குவதால் நாடாத துன்பமும் ஆகும். எனவே வெறுப்பு என்பதும் இன்பமே. பயிற்சியைத் தொடர்வதன் மூலம் மனம் தெளிவு பெறப்பெற ஒரு வனது சங்கல்ப ஆற்றல் அதிகரிப்பதால் அதே ஆற்றல் பயிற்சியைவிடாது தொடருவதற்கு மேலும் கூடிய உற்சாகத்தையும் தரும். சாதகன் உலகப்பொருள்களை விரும்பாத வைராக்கியத்தால் தனக்கு உள்ளே உள்ள ஆன்மாவிலேயே திருப்திபெற வல்லவனாகின்றான். பொருள்களின் கவர்ச்சியை விடுவதோடு அதன் சூக்கும மனவாசனைகளையும் முற்றாக இல்லாமல் செய்வதனால் மட்டும் பூரணவைராக்கியத்தைப் பெற லாம். அதாவது புலன்கள்புறப்பொருள்களைநாடாமை மட்டும் அன்றி மனத்திலுள்ள பொருள்களால் பெற்ற இன்பங்களின் ஞாபகங்களையும் அழிக்கவேண்டும். இது நிலையான பொருளுக்கும் நிலையற்ற பொருள் களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விவேகத் தினால் ஆராய்ந்து நிலையானதை அறியத் தேவையே இல்லாத பற்றுக்களையும் பழக்கவழக்கங்களையும் இலகுவாகக் கைவிடமுடியும். அதற்கு விவேகமும் புத்தியும் துணைசெய்யும். அதனாலேயே உடம்பு மேலானது, உடம்பைக்காட்டிலும் பிராணன் மேலா னது, பிராணனைக்காட்டிலும் மனம் மேலா னது, மனத்தைக் காட்டிலும் புத்திமேலானது, புத்தியைக் காட்டிலும் ஆன்மா மேலானது என உபதேசிக்கப்படுகின்றது.

**முடிவுரை**

“சண்டையிடும்போதும்சலியான்”என்றவாசகத்தில் பிரதான விடயம் சலியாமை என்பதை உணர்ந்ததும் அந்தவார்த்தை குறிக்கோளை அடைவது இலகுவான தன்று எனச் சாதகன் அறிவான். தான் அந்த இலக்கை அடையப் பல இடையூறுகளைச் சந்திக்க நேரிடும் என்பதையும், அவற்றை நீக்கி இடைவிடாது பயிற் சியைத்தொடரவேண்டும் என்பதையும் சலியாமை என்ற வார்த்தையில் இருந்து உய்த்து உணர்ந்து கொள் வான். அந்த உணர்வைப்பெற்றதும் அவன் சலியாமை பற்றிய தத்துவத்தைப் பூரணமாக ஆராய்ந்து பயிற் சியையும், வைராக்கியத்தையும் மேற்கொண்டு இலக்கை அடையும்வரை அவை இரண்டையும் பின் பற்றுவான். எனவே இந்தச் சண்டை புற உலகத்தில் அன்றி அகத் திலே செய்துகொள்ள வேண்டியதாகிறது. அதற்குப் புறச்சூழ்நிலை சாதகமில்லை என்று எண்ணுவது உண்மையில் அந்த உயரிய இலக்கைப் பிற்போட்டக் கொண்டு செல்லும் ஒரு வழியே அன்றி அதனால் எப்பய னும் வரப்போவதில்லை. இது பற்றி சுவாமிகளது துறவிச் சீடர்களுள் ஒருவரான செல்லத்துரை சுவாமிகள் தனது “சிவசிந்தனை” என்ற நூலில் கூறியிருப்பதை சாதகன் என்றும் மறக்காமல் இருக்க வேண்டியவனாவான். அவரது அக்கருத்து மேல்வருமாறு அமைந்திருக்கிறது.

“தெய்வம் உண்டென்றால் நமக்கு எல்லாம் உண்டு என்னும் திடபக்திதான் பூரண விசுவாசத்துக்கு அறிகுறி. தெய்வத்திற் பூரணவிசுவாசம் இருந்தால் அச்சத்துக்கு இடமில்லை. தெய்வம் உண்டு என்பதைப் பற்றிச் சற்றேனும் ஐயம் இருக்கப்படாது. இயற்கைச் சம்பவங்களாய் இருந்தாலும் சரி, செயற்கையாய் இருந்தாலும் சரி உலகின்கண் புதிதாய் ஒன்றும் நடக்கப் போகிற தில்லை. உலகம் தோன்றிய காலம் தொடங்கிப் புயல்களும், பூகம்பங்களும், இடி முழக்கங்களும் சம்பவிக்கின்றன. அன்று தொடங்கி இன்று வரையிலும் யுத்தமும், பஞ்சமும், இட்டலும் இடைஞ்சலும், பிணியும் பதைபதைப்பும் ஒன்றன் பின் ஒன்றாகப் பூமியின் ஏதேனும் ஒரு பாகத்தில் காணப்படாமல் இல்லை.”

“எங்கள் தேசமும் பூமியின் ஒரு பாகமாய் இருத்தலால் இவைகளால் தாக்கப்படும் போது நாம் ஆச்சரியப்படவோ திகிலடையவோ வேண்டியதில்லை. நாம் சிவனடியார்கள், நாமார்க்கும் குடியல்லோம். நாம் கடவுளுடைய பிள்ளைகள். அவருக்கு எங்களை முழுதும் ஒப்புக்கொடுத்திருக்கின்றோம். அன்னையைப்போல் அவர் எங்களை ஆதரிப்பார்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை ஓர் ஆட்கொண்டருளும் விளையாட்டு

பெருமானால் ஆட்கொள்ளப்பெறுதல் அடியவர்க்குக் கிடைக்கும் பெரும்பேறாகும். நம்பியாரூரர் பெருமானால் ஆவணங் காட்டி ஆட்கொள்ளப்பெற்ற பெருமையர். அவர் ஆளுடைய நம்பி என வழங்கப் பெறுகின்றார். இவ்வாறே சம்பந்தப் பிள்ளையார் ஆளுடைய பிள்ளை எனவும் திருநாவுக்கரசர் ஆளுடைய அரசு எனவும் திருவாதவூரடிகள் ஆளுடைய அடிகள் எனவும் வழங்கப்பெறுகின்றனர். இவ்வண்ணம் நால்வர் பெருமக்களும் வழங்கப் பெறுதல் ஆட்கொள்ளப் பெறுதலின் பெருமைக்குத் தக்க சான்று.

திருவெம்பாவையில் ஐந்து இடங்களில் ஆட் கொள்ளுதல் என்னும் பெருமொழி இடம்பெறுகின்றது. "நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலமும்..." என மாலறியா நான்முகனும் காணா மலையினை எனத் தொடங்கும் பாடலில் உளது. "ஐயா நீ ஆட் கொண்டருளும் விளையாட்டில்" என மொய்யார் தடம் பொய்கைப் பாடலில் உளது. "ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்" என ஓரொருகால் எனத் தொடங்கும் பாடலில் வருகின்றது. போற்றி அருளுக எனும் இறுதித் திருவெம்பாவையில் "போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்" என்னும் மணிவாசகம் இடம்பெற்றிருக்கின்றது.

**நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலம்**

நம்மைக் கோதாட்டுதல் என்பது நம்மிடமுள்ள குற்றங்களைப் போக்கும் பெருமானது அருளாடலைக் குறித்து நிற்கின்றது. நம்மிடமுள்ள குற்றமாவது இன்னும் மெய்யன்பு வாராமையே. 'பாசம் பரஞ்சோதிக்கு' என்று பேசும் போதெல்லாம் பேசுகிறோம் எம்பாவாய் எனப் பாடிப்பரவும் விடியற் போதிலே போதார் அமளியின் மேல் நேசம் வைத்து படுத்துப் புரள்கிறோம். "என் அத்தன் ஆனந்தன் அமுதன்" என்று தித்திக்கப் பேசுவதில் ஒரு குறையுமில்லை. ஆனால் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தொலி வீதியில் இனிதாய் ஒலிக் கும் வேளையில் கதவும் திறவாமல் கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்குகின்றோம். இவ்வாறான வஞ்சப் பத்தி செய்யும் அழுக்கு மனத்தைப் போக்கிச் சித்தம் அழகியராக ஆக்குவது பெருமானது அருளாடலே. இது பெருமானது ஆட்கொண்டருளிக் கோதாட்டும் சீலம் எனப் பாடப்பெற்றது.

**தானே வந்தெம்மைத் தலையளித்து ஆட் கொண்டருளும் வான்வார் கழல்**

இவ்வாசகத்திலே வார்கழல்கள் என்பது ஓர் சிறப்பு. தானே வந்து என்பது இன்னோர் சிறப்பு. தலையளித்து என்பது தலையாய சிறப்பு. இவ்வாறு மூன்று சிறப்புக்களை உள்ளடக்கியதாக இந்த ஆட் கொண்டருளும் சிறப்பு உளது. "வான் வார் கழல்" என்பதிலுள்ள 'வான்' எனும் பதம் 'சேண்' பொலியும் திருவடியைக் குறித்தது. இத்திருவடி இந்திரன், பிரம்மன், திருமால் ஆதிய விண்ணோரும் காணமுடியாத சிற்பரவெளியில் உறையும் பொற்பத மாகும். 'வார்' எனும் தமிழ்ப்பதம் நீள் எனும் பொருளதாகும். வார்கழல் என்பது சேண் பொலியும் திருவடி நீள்கழல்களாக நிலந்தன் மேல் வந்தருளும் கருணை யின் எளிமையைக் குறிப்பது. தலையளித்து என்பது தலையாய தண்ணருள் பொழிவதைக் குறிக்கிறது. தலையாய தண்ணருள் என்பது தென்னன் பெருந் துறையான் காட்டாதனவெல்லாம் காட்டிச் சிவம் காட்டி தாட்டாமரை காட்டித் தன் கருணைத் தேன் காட்டி நாட்டார் நகை செய்ய நாம் மேலை வீடெய்த என்றபடி அருள்நிலை காட்டிக் காட்டிக் காட்டி வீடுபேறு அருளும் தலையாய அருளாகும். 'தானே வந்து' என்பது வான்வந்த தேவர்களாலும் மற்றும் பாதாளத்தார் புறத்தார் ஆகிய ஆராலும் காண முடியாத பெருமான் இந்த மண்மேல் மலரடிவைத்து அடியவரின் பழங்குடில் தேடி தானாக வந்தருள்கின்றாரே! அந்தக் கருணை யின் பெருமையைக் குறித்து நிற்கின்றது. இவ்வாறாக சேண்பொலியும் திருவடி அடியவரின் இல்லங்கள் தோறும் தானாக எழுந்தருளித் தலையளிபுரிவதை "தானே வந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும் வான்வார் கழல்" என்னும் மணிவாசகம் விளக்கி நிற்கின்றது.

**ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டு**

மார்கழி நீராடும் பாவை நோன்பினை நம்பெருமான் அடியரை ஆட்கொண்டருளும் விளையாட்டாக ஏற்பாடு செய்து வைத்தனர் என்றே மணிவாசக சுவாமிகள் கருதினர். இவ்விளையாட்டிலே அடியவர்கள் சீதப்புனல் நிறைந்திருக்கும் பொய்கையில் இருள் பிரியாத வைகைறைப் போதில் முகேர் என்ற சத்தம் எழுமாறு பாய்ந்து பாய்ந்து குடைந்து குடைந்து மூழ்கி எழுந்து நீராடிப் பாடிப்பரவி விழிபடுவார்கள். இவ்வழிபாட்டிலே நமது மூதாதையர் பலர் ஆர்வத்தோடு ஈடுபட்டனர். அவ்வாறு ஈடுபட்டோரில் பக்குவமான சிலர் உய்தி பெற்றனர். இப்போது நாம் இந்த ஆட்கொண்டருளும் விளையாட்டில் பங்குகொள்கிறோம். எம்மையும் பெருமான் இந்த இனிய நோன்பினை நோற்கும் பாக்கியத்துக்கு ஆளாக்கினார். பெருமான் தானும் பெருமாட்டியுமாக இத் தீர்த்த நீராகவே இருந்து எம்மைப் புனிதராக்கி அருள்கின்றார். ஆர்த்த பிறவித் துயர்கெட நற்றில்லைச்சிற்றம்பலத்தேயாடும் கூத்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



இந்தச் சீதப்புனல் ஆடலையும் ஆடச் செய்து பாவமெல்லாம் தீர்க்கிறார்.

இவ்வாறாகத் திருவெம்பாவை பாடிப் பரவும் நோன்பினை மணிவாசகப் பெருமான் ஆட்கொண்டருளும் விளையாட்டு எனும் மணிவாசகத்தால் குறிப்பிட்டிருக்கிறார். எம்பாவாய் எம்பாவாய் என்றென்று மணிவாசக சுவாமிகள் பாடிய பாவைப்பாடலை நாம் திருவெம்பாவை திருவெம்பாவை என்று தித்திக்கப் பேசி வழிபாடாற்றி வருகிறோம். இத்துடன் அமையாது ஆட்கொண்டருளும் விளையாட்டு எனப் பொருளுணர்ந்தோதியும் வழிபாடு செய்குவோம்!

**ஆட்கொள்ளும் வித்தகர் தாள்**

மணிவாசக நாயகி மார்கழி நீராடலை ஓர் ஆட்கொண்டருளும் விளையாடலாகக் கண்டு கொண்டார். அவர் பூத்திகழும் பொய்கையில் நீராடும் போது முதலில் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தனின் திருவார்த்தை பேசிப்பேசி நீராடுகிறார். அடுத்து அப்பொங்கும் பொய்கையே நங்கள் பெருமாட்டியும் நங்கோனும் போல் தோன்ற அம்மையப்பர் எனும் அருள்வெள்ளத்திலே பாய்ந்து பாய்ந்து மூழ்கித் திளைக்கிறார். சீதப்புனலாடிச் சிற்றம்பலம்பாடி, வேதப் பொருள் பாடி, சோதி திறம் பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி என்று ஒவ்வொன்றாகப் பாடிப் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதத் திறத் தைப் பற்றிக் கொண்டனர். பெய்வளை என்பவர் பெருமானிற் பிரிவிலாத அவர்தம் அருட் சத்தியேயாம். அச்சத்தியின் பதம் அருட்பதமே. ஈற்றில் இவ்வருட்பதத்தைப் பற்றிக் கொண்டமையை நமது பட்டறிவுக்கேற்ப மேல்வருமாறான உவமானத் தால் விளங்கிக் கொள்ளலாம். இது பிறந்த பசுக் கன்று தாயின் முகம், வயிறு, மடு என்பவற்றில் வாய்வைத்து வைத்து முடிவில் முலைக்காம்பைக் கௌவிக்கொண்டதைப் போன்றது. அருட்பதமே முன்னி அருள் சுரக்கும் திருவிடம். அதுவே ஆட் கொண்டருளும் வித்தகம் புரிகிறது. அடியரைப் பேரரையர்க்குப் பித்தராக்குகின்றது. அப்பித்தின் வண்ணம் "ஓரொருகால்." எனத் தொடங் கும் இத்திருவெம்பாவைப் பாட்டின் முதல் நான்கடிகளிலும் விவரிக்கப்பட்டிருக்கிறது. அப்பித்தின் வண்ணங்களில் ஒன்று "ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான் சீரொருகால் வாயோவாள்" என்பது. இன்னொன்று "சித்தங்களிகூர நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப் பாரொருகால் வந் தனையாள்" என்பது. விண்ணோரைத்தான் பணியாள் என்பதும் மற்றொரு வண்ணம். இவற்றை எமது பக்குவத்திற்கேற்ப பலப்பலவாக நினைந்து நினைந்து நம் அன்பைப் பெருக்கலாம். "நம்பெருமான் சீர் ஒருகால் வாயோவாள்" என்பதை பெருமானது எளிவந்த கருணை முதலான சீர்மைகளைப் பிட்டமுது செய்தருளியமை, பிரம்பால் அடிபட்டமை ஆகிய அருட்செயல்களினூடாக வாய் ஓயாது சொல்லிக்கொண்டிருந்தார் என்றவாறாக நினைக்கலாம். இவ்வாறு சொல்லும்போது 'கண்ணப்பன் அளித்த ஊனமுதை உகந்தது போலச் செம்மனச் செல்வி ஈந்த பிட்டைத் தின்று தின்று இனிய பிட்டு என்று சொல்லினரே. இடையிடையே எம்பெருமான் எம்பெருமான் என சொல்லினாள் எனவும் நினைந்து உருகலாம். அவள் நினைத்த சீர்மைகள் நிலந்தன்மேல் வந்து நீள்கழல்கள் காட்டிய சீர்மைகள் போலும். தன் பொருட்டாக நிறைமலர்க் குருந்தின் கீழ் பரமாசாரியராக அமர்ந்து "பெரியோன் ஒருவன் கண்டுகொள் என்று கழலிணை காட்டிப் பிரியேன் பிரியேன்" என்று சொன்னவற்றையும் நினைந்திருப்பள் போலும். அவ்வாறு நினைந்ததும் மகிழ்ச்சி பெருகிக் களிப்பாகச் "சித்தங்களி கூர தாரை தாரையாகக் கண்ணீர் பெருக்கி, இம்மண் பெருமான் பாதம்பட்ட மண்ணன்றோ எனவும் அம்மண்ணில் வீழ்ந்து வணங்கி எண்ணி எண்ணி உருகலாம். பெருமான் இவ்வாறெல்லாம் மண்ணினில் வந்து அருள் செய்வதை நினைந்து "புவனியிற் போய்ப்பிறவாமையின் நாள் நாம் போக்குகின்றோம். இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்று திருமால் முதலானோர் ஆசைப்படு கின்றனர் எனவும் அவர்கள் 'பிச்சைத்தேவர்', 'சேட்டைத்தேவர்' என்று எண்ணினர் எனவும் கருதலாம். இவ்வாறெல்லாம் எண்ணி எண்ணி நம் அன்பைப் பெருக்கும் வகையில் "ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்" என்ற வாசகம் உளது.

**ஆட்கொண்டருளும் பொன் மலர்கள்**

ஆட்கொள்ளும் வித்தகர் சொரிந்த இன்பப் பெருக்குக்கு ஆளான மணிவாசக நாயகி அந்த நற்றாளையே நினைந்து போற்றலானார். "செங் கணவன் பால் திசைமுகன் பால் தேவர்கள்பால் எங்கும் இல்லாததோர் இன்பம் நம்பாலதாக. செங்க மலப் பொற்பாதம் தந்தருளும் சேவகன்" எனப் போற்றுகிறார். "கண்ணால் நானும்கண்டேன்காண்க" என்றபடி "கண்ணார் அமுத மாய் நின்றான் கழல்பாடி" எனத் தமக்கு அருள் புரிதற்கு வந்த குருபதத்தைப் போற்றுவது தலையாய சிறப்பேயாகும். இக்குருபதத்தைப் போற்றும் அனுபவம் முதிர்ந்ததும் அனைத்தும் பொற்பாதமாகவே நிறைந்தது. அப் பொற்பாதமே உயிர்களைத் தோற்றுவிக்கிறது. அதுவே போகமருளிக் காக்கிறது. அதுவே ஒடுக்குகிறது. அதுவே உயிர்களை ஆட்கொண்டருள்கிறது.

இவற்றை யோசிக்கும் வேளையில் திருவெம் பாவையினைப் பெருமானது ஆட்கொண்டருளும் விளையாட்டென முழு மனதோடு நம்பி ஆர்வத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுவதொன்றே நம் வேலை் ஆட்கொண்டருளுதல் பெருமானது வித்தகச் சேவகம் எனத் தெரிகிறது. அவரே நமது அழுக்கு மனத்தைப் போக்கி அழகிய சித்தத்தினர் ஆக்குகிறார். அவரே தானாக நமது இல்லங்கள் தோறும் எழுந்தருளித் தலையாய இன்னருளை வழங்குகிறார். அந்த இன்னருளாலே நம்மைப்பேயே போலிருந்து பிரேமை கொள்ள வைக்கிறார். ஈற்றில் செங்கமலப் பொற்பாதத்தைத் தந்தருள்கின்றார்.

"போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும்தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழி நீராடேலோரம்பாவாய்"

## சிதம்பர தரிசனம் காட்டிய குருவே

சிதம்பர தரிசனம் காட்டியே சிவ
பதமலர் சூட்டிய பரம குருவே.
- சிதம்பர

நிதமு முன்னாமம் நினைந்திடச் செய்தே
இதய நடமிடும் என்னருட் குருவே.
- சிதம்பர

பதமொன்றும் வேண்டேன் பணிந்திடல் வேண்டும்
பதமலர் நாளும்நான் பாடி யாடியே
- சிதம்பர

அன்னையிற் பெரிதும் அன்புடை அரசே
உன்னை மறந்தொரு கணமும் வாழேன்
- சிதம்பர

என்னை இங்கினும் இடர்பட விடாமல்
மன்னா மாதவா மாறா தருள்வாய்
- சிதம்பர

பொன்னம் பலத்துப் புனிதனும் நீயே
மன்னிய கலம்பக வாசனும் நீயே
- சிதம்பர

துன்னிய மருள்கெடத் தூக்கிய திருவடி
சென்னியில் வைத்தெனை யாளுவ தென்றோ
- சிதம்பர

பட்டது போதும் பரம சுகம் பெற
அட்டனே ஆண்டருள் அரகர சிவசிவ.
- சிதம்பர

-சிவசிந்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானமாலை தரும் நந்தா இன்பம்

தியானஞ்செய்வோர்க்குச்சாதகமாயிருத்தற்பொருட்டு பாமலர்களால் தொடுக்கப்பட்ட பாமாலையாதலால் தியானமாலை எனப்பட்டது. இத்தியானமாலையின் முதற் பன்னிரு பாடல்களும் உயிர்வருக்கக் கோவையாக கோர்க்கப்பட்டிருக்கின்றன. தொடர்ந்த இரு பாடல்களும் ஆய்த ஒற்றையும், 'க' கர ஒற்றையும் தொடக்கமாகக் கொண்டிருக்கின்றன. அடுத்த பத்துப் பாடல்களும் 'ந' கர வருக்கத்துப் பாடல்களால் தொடுக்கப்பட்டிருக்கின்றன. இறுதிப் பாடல் முதற்பாடல் போன்று 'அ' கரத்தை முதலாகக் கொண்டிருக்கின்றது. இந்த எழுத்தொழுங்கு இருபத்தைந்து பாடல்களையும் தொடராக மனனஞ் செய்து கொள்வதற்கு வாய்ப்பானதென்பது தெளிவு.

எழுத்தொழுங்கில் அமைந்த பாமலர்த் தொடையழகு வெளிப்படையாகத் தெரிகின்றது. இம்மாாலையின் பொருட்டொடர் ஒழுங்கு உள்ளார்ந்து செல்கின்றது. ஓம் நமசிவாய என்ற மந்திர இழையில் பாமலர்கள் பக்குவமாகக் கோவை செய்யப்பட்டிருக்கின்றன. உயிர்வருக்கக் கோவையான முதற்பகுதி ஓங்காரத் தியானமாயுள்ளது. ஒற்றெழுத்துப் பாவிரண்டும் குருவின் மகத்துவத்தைத் துதிப்பது. குரு உபதேசமாகப்பெறும் நமச்சிவாய மந்திரத் தியானமாக 'ந' கர வருக்கப் பத்துப் பாடல்களும் உள்ளன. இறுதிப் பாடல் இம்மந்திர மாலையின் பயன் கூறுகின்றது. இவ்வாறாகப் பாமலர்களின் அக்கரக் கோவையழகும், ஓம் நமச்சிவாய பொருட்டொடையழகும் தொடர்பறாத அகலாத் தியானத்திற்குச் சாதகமாய் அமைந்துள்ளன.

**தியானத் தொடக்கம்**

தியான மாலையின் தொடக்கத்திற் சுவாமிகள் தாம் முதல்வன் பாதத்தைக் கண்டவரெனவும், முதல்வன் பாதத்தைக் காணும் நாட்டமுடையவரே இத்தியான மாலையை ஓதித் தியான சாதனை செய்து சிவகதியுறுதற்குத் தக்க அதிகாரிகள் எனவும் கூறுகிறார்.

சுவாமிகள் தாம் ஓங்காரத்தின் சிகரத்தில் உள்ள சிவபெருமானது இணையடிகளைக் கண்டவரெனவும், தாம் கண்ட ஓங்காரக் காட்சியையும் கண்ட முறையையும் முதலிருபாடல்களிலும் கூறுகின்றார்.

**"அகரத்தி லுகர மகர மமரும்**
**உகரத்தி லகரம் மகர முறையும்**
**மகரத்தி லகர வுகரம் மயங்கும்**
**சிகரத்தில் கண்டு தெளிந்தவன் சித்தனே"**

**"ஆதார வாதேய முழுது மானவன்**
**மாதா நாதனாய் மன்னி நின்றவன்**
**பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன்**
**பாதார விந்தம் பரவிக்கண் டேனே."**

(ஓங்காரத்தில் 'அ' கரம், 'உ' கரம். 'ம' கரம் என்ற மூன்று எழுத்துக்கள் உள்ளன. இம்மூன்று அக்கரங்களுள் 'அ' கரம் இறையை ( மும்மூர்த்திகளை ) க் குறிக்கும். 'உ' கரம் உயிரைக் குறிக்கும். 'ம' கரம் உலகைக் குறிக்கும்.) 'அ' கரப் பொருளான இறையை (மும்மூர்த்திகளை) ஆதாரமாகக் கொண்டு உலகுயிர்கள் அமர்ந்திருக்கும். 'உ' கரப் பொருளான உயிரில், இறையும் உலகும் உறையும். 'ம' கரப் பொருளான உலகில், உயிரும் இறையும் மயங்கும். (மயக்கமாவது இறையும் உயிரும் உளதோ இலதோ என்ற ஐயமும், திரிபுமாகும்.) இந்த ஓங்காரப் பொருளை ஓங்காரத்தின் சிகரமான சிவபெருமானின் திருப்பாதத்தைக் கண்டு தெளிந்தவன் ஞானியா வான்.முதல்வன் ஒருவனே மும்மூர்த்திகள், உயிர், உலகு எனும் முழுவதுமானான். அவர் முழுவதிலும் அம்மையப்பராய் நிலைபெற்றிருக்கிறார். அவரே ஐம்பூதத்தியற்கையாகப் பொலிந்து தோன்றுகிறார். அவரின் திருவடிக் கமலத்தைத் தியான யோகத்தாற் கண்டேன்.

இவ்வாறு பாத கமலத்தைப் பரவிக் கண்டமையைக் கூறிய சுவாமிகள், ஈசன் இணையடியைக் காணும் நாட்டமுடையவரே இம்மந்திரமாலையைத்தியானித்துத் திருவடிப்பேறடைய வல்லவர் என்பதை மேலே கூறு கின்றார்.

('சிவபெருமானே பூதாதி ஐந்துமாய்ப் பொலிந்த புண்ணியன் எனவும். பொலிந்து தோன்றும் உலகமாகிய 'ம' கரம் மயக்கும் இயல்பினது என்றும் முன்னர் கூறப்பட்டது. சிவபெருமான் புண்ணியச் செயலாக உலகமாகத் தோன்றி நிற்பதுடன் உலகிலே மாதாநாதனாய் மன்னி நின்று உயிர்த்திரளை உய்விக்கும் கருணையையும் பொழிகின்றார். ஆயின் ஐம்பூதத்தியற்கையாகத் தோன்றிய உலகும், இதே பஞ்சபூதங்களாலாய உடலும் இயல்பாகவே மாந்தரை மயக்குவனவாக உள்ளன. இதனால் மாந்தர் பொலிந்து தோன்றும் உலகும் தமது உடலுமே மெய்யெனக் கொள்கின்றனர். உலகிலும் உடலிலும் மறைந்து நிற்கும் மாதாநாதனையும், புண்ணியனையும் காணமுடியாதவராய் உள்ளனர். உலகும் உடலும் மாற்றமுற்று மாய்ந்து போவதைக் கண்கூடாகக் கண்டிருந்தும் இவை மெய்யென்றே மயங்குகின்றனர். நில்லாத உலகிலும் உடலிலும் நிலைபேறாய் உள்ள தோன்றாப் பெருமையனைக் காணாது ஐயுறுகின்றனர். காணாத பொருளுக்காகக் கையிலுள்ள பறவையைக் கைவிடுவதோவென்று போக போக்கியங்களில் நாட்ட முடையவராய் இருக்கின்றனர். ஈசன் இணையடியைக் காண்பதில் நாட்டமில்லாதவராயுள்ளனர். இன்ப துன்ப மாயையில் உள்ள நாட்டத்தை விட்டு இணையடி காண்பதில் நாட்டமுடையவரே இம்மந்திரத்தை ஓதித்தியானித்திருத்தற்குத் தக்கவர்கள் என்ற விளக்கத்தை மேல்வரும் இரு செய்யுட்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் அடக்கமாகக் கூறுகின்றார்

**'இன்றுளோர் நாளை யில்லாமை கண்டும்**
**பொன்று முடலைப் பொன்போற் போற்றி**
**நன்றுதீ தென்று நாட்டங் கொண்டோர்**
**என்று காண்பரோ ஈச னிணையடி'**

**'ஈயாத மாந்தர் இருந்தென் னிறந்தென்**
**ஓயாக் கவலையி லுடலஞ் சலித்து**
**மாயா விகார மனைமக்க ளுறவெனும்**
**பேயாற் பிடிபட்டுப் பிதற்றிமாண் டாரே'**

முதல்வன் மாந்தர்க்கு உடலையும் உலக வாழ்வையும் வழங்கியுள்ளான். மாந்தர் இவ்வுலகில் வாழ்ந்து திருவடியைச் சேரவேண்டும் என்ற கருணையினாலே இவற்றை வழங்கினான். ஆனால் முதல்வன் வழங்கிய மாய உடலும், மாயவாழ்வும் இவற்றை மெய்யென எண்ணுமாறு மயக்குகின்றன இம்மயக்கத்தால் மாந்தர் மாயும் உடலைப் பொன்போல் மதிக்கின்றனர். மாயவாழ்வு காட்டும் இன்ப துன்ப மயக்கத்தால் நன்மை தீமை எனும் நாட்டங் கொண்டு திரிகின்றனர். இவர்கள் திருவடியை என்று காணப்போகின்றனர்? தேகத்துடன் வாழும் போதே காணாத இவர்கள் தேகம் விழ்ந்த பின்னரோ காணப்போகின்றனர்?

முதல்வன் வழங்கிய உலக வாழ்வைத் திருவடியைக் காண்பதைக் குறியாகக் கொண்டு அர்ப்பணித்து விடாமல், வாழ்வையே உலோபித்தனமாகப் பொத்திக் கொண்டு வாழ்வோர் வாழ்விற் கண்டதென்ன? ஓயாக் கவலையால் உழன்று உடல் இளைத்தல், முதல்வனது அடியவர்களை மாயை விகாரப்படுத்தி மனை மக்கள் உறவு எனக்காட்ட இப்பொய்யுறவுப் பேயால் பீடிக்கப்பட்டுப் பித்துரைகளைப் பிதற்றித் திரிதல், ஈற்றில் மாண்டு போதல், இதுவே கண்டது. இதற்காகவா முதல்வன் இவ்வாழ்வைத் தந்தான். இவர்கள் இருந்தென்ன? இறந்தென்ன?

இவ்விரு செய்யுள்களாலும் வாழ்வின் பயன் திருவடி காண்பதே என்பது எதிர்மறையாகக் கூறப்பட்டுள்ளது. இது உடன்பாட்டு முறையிற் கூறுவதிலும் ஆற்றல் வாய்ந்ததாயுள்ளது. இதனால் தேகமோகத்தையும் மாய வாழ்வையும் வெறுத்துத் திருவடி காண்பதையே நாட்டமாகக் கொண்டு வாழ்வோரே இம் மந்திரத்தை ஓதி ஓங்காரத்தியானம் செய்வதற்குத் தகுந்த அதிகாரிகள் என்பது நிரூபணஞ் செய்யப்பட்டது.

'சிவபெருமானது பாதார விந்தத்தைக் கண்டவரெனவும், இணையடியைக் காணும் நாட்டமுடையரே தியான மாலையை ஓதித் தியானஞ் செய்தற்குரிய அதிகாரி என்பதையும் தொடக்கத்தில் கூறிய சுவாமிகள் நாட்ட முடைய சாதகரோடு தாமும் கூடநின்று வழிப்படுத்தித் திருவடிப்பேறு அருளும் வண்ணத்தை இம் மந்திர மாலையில் நிறைமொழிகளால் மேலே அருளிச் செய்கிறார்.

இப்பாமாலையின் ஓரிடத்தில் ( 11ம் பாடல் ) ஓங்காரக் கம்பத்தில் உன்னதமேடை, பாங்கானவீடு, பள்ளியறை, தூங்காத் திறவுகோல் என்ற சொற்றொடராலான உருவகம் உளது. இவ்வுருவகப் பொருள் மந்திரமாலை முழுவதும் இழையோடுகிறது. இவற்றுள் ஓங்காரக் கம்பம் என்பது இறை, உயிர் ,உலகு என்பவற்றைக் குறிப்பது. ஓங்கார உன்னதமேடை என்பது ஓங்ககாரத்தின் சிகரப்பொருளான முதல்வன் உறையும் . தத்துவாதீதமாயுள்ள நாதாந்தவெளி,பாங்கான வீடு நாதாந்த வெளியிலுள்ள செம்பொன்னம்பலம். தூங்காத் திறவுகோல் என்பது இடையறாத நமசிவாய மந்திரத்தியானம். திருவடி உறையும் இரகசியத்தானமே பள்ளியறை.

## சுவாமிகள் பாதாரவிந்தத்தைக் கண்ட முறை

இப்பகுதியிலே சுவாமிகள் தாம் பாதார விந்தத்தைக் கண்ட முறையை மேல்வரும் பாடலில் கூறுகிறார்.

**'உம்பர் தலைவனை யூழி முதல்வனை**
**வெம்பந்தம் நீக்கும் வேதாந்த விளக்கை**
**சம்பந்த மாக்குந் தத்துவா தீதனை**
**நம்பந்தம் நீக்கி நாங்கள்கண் டோமே'**

மண்ணுலகில் வாழும் மாந்தர்க்கும், விண்ணுலகில் வாழும் தேவர்க்கும் உம்பருலகில் வீட்டின்பம் துய்த்து வாழும் உம்பர்களுக்கும் மேலாயுள்ளவன் முதல்வன். அவன் உயிர் உலகனைத்தும் ஊழிக்காலத்தில் அழிந்த பின்னும் அழியாது இருந்தபடியே இருப்பவன். அவன் வேதத்திற்கும் எட்டாத வேதாந்த தீபமாய் ஒளிர்ந்து பந்தத்தை நீக்குகின்றான். தத்துவங்கடந்த நாதாந்த வெளியில் உள்ள அவனே தன்னுடன் சம்பந்தமாக்கவல்லவன். நான் உலகுயிர் இறை என்பவற்றைச் சாராது அம்முதல்வனைச் சார்ந்து வெம்பந்தத்தை நீக்கிப் பாதத்தைக் கண்டேன்.

இதனால் முதல்வனைத் தியானஞ் செய்து அம்முதல்வன் அருளிய உடல், உலக வாழ்வு என்னும் பந்தங்களில் நின்றும் நீங்கி பாதார விந்தத்தைக் கண்டதாக சுவாமிகள் கூறியுள்ளனர்.

## சாதகரும் பாதார விந்தத்தை அடைய வழிப்படுத்தல்

முதலில் முதல்வன் அருளாலே பாதார விந்தத்தைக் கண்ட சுவாமிகள் பின்னர் சாதகர்களையும் அம்முறையிலேயே முதல்வனைச் சார்ந்து அவனருளாலே பாதார விந்தத்தை அடைய வழிப்படுத்துகின்றனர். இவ்வாறு வழிப்படுத்துகையில் முதலில் முதல்வனைச் சாருங்கள் எனவும் பின்னர் அவனையே சார்ந்து சிந்தை செய்திருங்கள் எனவும் வழிப்படுத்துகின்றார். முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சஞ்சலம் தீர முதல்வனைச் சார்தல்.**

**'ஊரும் பேரு மில்லா ஒருவனை
ஆரு மறியா அறிவுக் கறிவை
நீரும் தீயும் காலுமா னவனைச்
சாருந் தீரும் சஞ்சலம் முற்றுமே'**

ஊர் பேரில்லாதவனும், ஆராலும் அளந்தறிய ஒண்ணா அறிவுக்கறிவாயுள்ளவனும் ஓங்காரத்துச்சியில் உள்ள முதல்வன். அந்த ஒருவனே நிலம், நீர் ஆகிய ஐம்பூதத்தியற்கையான உலகுக்கும் முதல்வனாய் உள்ளான். ஆதலால் உலகைச் சாராது முதல்வன் ஒருவனையே சாருங்கள். அதனால் சஞ்சலத்துக்குக் காரணமான வெம்பந்தந்தீரும்.

**முதல்வனைச் சாரும் தவம்**

**'என்னு ளொளியை ஏந்திழை பங்கனை
மின்னுஞ் சடைமுடி விகிர்தனைச் சிவனை
கண்மூண் றுடைய கடவுளைக் கங்கை
தன்னைவைத் தவனைச் சாருந் தவமதே'**

முதல்வன் என்னகச் சோதியாய் உள்ளான். (அதுபோல் உன்னுள்ளும் உள்ளான்) உலகுயிர் முழுவதிலும் சிவசக்தி வடிவாய் நிலை பெற்றிருக்கின்றான். சிவந்த சடாமுடியுடன் சோதி வடிவமாயுள்ளான். உச்சியிலே செயலறியாத சிவமாய் இருந்தபடியே இருக்கின்றான். இறை, உயிர், உலகு என்னும் முழுவதையும், முழுவதிலுமுள்ள முதல்வனையும் காட்டற்குரிய முக்கண்களைக் கொண்டிருக்கின்றான். முழுவதையும் சாரும் வேகத்தைக் கெடுத்துத் தன்னையே சார்ந்திருத்தற்கு அடையாளமாகக் கங்கையைச் சடையிலே தாங்கியிருக்கின்றான். அவனைச் சார்ந்து இருத்தலே அவனோடு சம்பந்தமாவதற்கான தவமாகும்.

**சிந்தை செய்யுமாறு வழிப்படுத்தல்.**

முதல்வனைச் சாருமாறு வழிப்படுத்திய சுவாமிகள் சார்ந்து அவனையே சிந்தை செய்திருக்குமாறு கூறுகிறார்.

**'ஏகநா யகனை எல்லாஞ்செய் சித்தனை
போகநா யகனைப் புணர்முலை பங்கனை
மோகமார் புரத்தை முனிந்த முதல்வனைத்
தேகம் வீழுமுன் சிந்தைசெய் வோமே'**

முதல்வனே முழுவதையும் ஆளும் நாயகன். அவனே முழுத்தொழிலும் புரியும் வல்லாளன். உலக போக போக்கியங்களை வழங்குபவனும் அவனே. அதன் பொருட்டே அவன் மாதொருபாகனாயுள்ளான். போகமெல்லாம் போகப் பொருட்களாலேயே கிடைக்கின்றனவென்ற மோகத்தை ஏற்படுத்தும் முப்புர அரக்கர்களையும் கோபித்து எரித்தான். அம்முதல்வனைச் சார்ந்து கன்றிய காலன் கணத்தினில் வருவான் என்று தேகம் வீழ்வதற்கு முன் தியானிப்போம்.

சுவாமிகள் முதலில் தாம் தியானஞ் செய்தமுறைமையைக் கூறுகின்றார்.

**சுவாமிகள் தியானஞ் செய்த வண்ணம்**

**'ஐவர்செய் வினையில் அயர்ந்து விடாமல்
பொய்வினை நீக்கிப் புண்ணியந் தேக்கிக்
கையும் மெய்யும் கலந்து வணங்கி
நையு மன்பில் நான்தொழு தேனே'**

நான் ஐம்புலக்கள்வரின் அலைக்கழிக்கும் செயலுக்கிட மில்லாத வகையில் விழிப்புடனிருந்து வீண்பாவனைகளை விலக்கினேன். சிவசிந்தனை ஒன்றினாலே உள்ளகம் முழுவதையும் நிறைத்தேன். உடலும் உள்ளகமும் ஒன்று கலந்து வணங்கி அன்பிற் கசிந்துருகி தொழுது தியானித்துத் தரிசித்தேன்.

இதனால் சாதகர்கட்கு முன்மாதிரியாய் இருக்கும் வண்ணம்சுவாமிகள் தமது தியான இருப்பைக் குறிப்பாக விபரித்தார். இனிச் சாதகர் தியானஞ் செய்யவேண்டிய முறையை விபரிக்கின்றார்.

**சாதகர் தியானஞ் செய்யும் வண்ணம்**

**'ஒன்பது வாயிலும் ஒக்க வடைத்துநின்
றென்ப துருகி இளகிக் கசிவுற்
றின்ப துன்ப மெல்லாங் கடந்தால்
பொன்பொதி செஞ்சடைப் புனிதன் வருமே'**

கண், காது முதலான உடம்பின் ஒன்பது வாயில்களையும் ஒருங்கே அடைத்து உயிர்ப்படங்கிச் சித்திரப்பாவை போல் இருந்து, உள்ளம் நெக்கு நெக்கு நெகிழ்ந்து, உருகியுருகி, இன்பதுன்பமாகிய உணர்வற்று, நினைப்பற நினைந் திருந்தால் சோதிமயமான சடையுடைய அரும்பெருஞ்சோதியான முதல்வன்வெளியிலே வெளியனாக வருவான்.

இதனால் முதல்வன் தரிசனத்தைத் தரும் செவ்விதான ஓங்காரத் தியானம் கூறப்பெற்றது.

**நந்தா இன்பம் (பள்ளியறைச் சுகம்)**

**"ஓங்காரக் கம்பத்தி னுன்னத மேடையின்
பாங்கான வீட்டடின் பள்ளி யறையைத்
தூங்காத் திறவுகோல் கொண்டு திறந்தால்
நீங்காச் சிவகதி நிச்சய மாமே"**

பாசபந்தங்களைப் போக்கி ஓங்காரக் கம்பத்தில் ஏறி, அதன் மேடையிலே கசிந்துருகித்தியானத்திலிருந்து, இத்தியானத்தினாலே உலகுயிர் இறையெனும் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களில் உறங்கி , முதல்வனை உறங்காதிருந்து இடையறா விழிப்புடன் தியானித்திருக்கும் திறவுகோலால் பள்ளி யறையைத்திறந்தால் பள்ளியறையிலுள்ள பரமசிவத்தின் பாதகமலங்களைச்சேர்ந்திருக்கும்பெரும்பேறு பெறுதல் உறுதி.

இதனால் ஓங்காரத்தியானத்தினாலே ஓங்கார சிகரத்திலுள்ள சிவன் பாதத்தைச் சேர்ந்திருத்தல் முகஞ்செய்யப்பட்டது.

### பள்ளியறைச் சுகத்திற்கான பக்குவம்

பள்ளியறைச் சுகத்திற்கான பக்குவத்தில் செவ்விய வணக்கம்

**'ஔவிய நெஞ்சை அறவே யொழித்து**
**நௌவிய மழுவு மேந்தும் நம்பனைச்**
**செவ்விதின் வணங்கிற் சித்தி முத்திகள்**
**எவ்வம தின்றி யெய்திட லாமே'**

துள்ளும் மனமாகிய மான்குட்டியையும், அதனைப் பலிகொள்ளும் மழுவாயுதத்தையும் ஏந்தியிருக்கும் பெருமான் அருளாலே பாச பந்தங்களில் பந்திக்கப்படும் தீயமனத்தை முற்றும் போக்கி செம்மை மனத்தால் கசிந்துருகி இடையறாத்தியானத்திருப்பதால் இடையூறு ஏதுமின்றி சித்தியெய்தலாம். முத்திப்பேறும் சித்திக்கும்.

இதனால் செவ்விய வணக்கம் உரைக்கப்பட்டது.

### நமச்சிவாயத் தியானம்

நமச்சிவாயத் தியான இழையில் ஏழு வண்ணங்கள் தெரிகின்றன.

1. குரு வணக்கம்
2. நமச்சிவாய மந்திர மகத்துவம்
3. உபதேச மந்திர மகிமை
4. சுவாமிகள் உபதேச மந்திரத்தால் பெற்ற அநுபூதி
5. சாதகரின் உபதேச மந்திர சாதனை
6. சுவாமிகளது பேசானுபூதிப் பேறு பற்றிய விவரணம்
7. சாதகர் சாதனையால் சிவத்தைச் சார்தலும் சிவம் நான் என தென்பவற்றைப் போக்கி அருளலும்

**1. குரு வணக்கம்**

**அஃகா மனத்தா லறிவை யெழுப்பி**
**அவஃகாக் குருபதம் மென்மேலும் போற்றி**
**எஃகு போல இளகிக் குழைந்தால்**
**இஃதேபே ரின்பம் இடரிலை யென்றுமே'**

**'கங்குல் பகலற்ற காட்சியிற் பிரியார்**
**எங்குஞ் சிவமென் றறிவா ரிவரே**
**தங்கும் பிறவியிற் சாராத் தவத்தினார்**
**எங்குங் கண்ணுற் றிறைஞ்ச லினிதே'**

வஞ்சமற்ற செம்மை மனத்தில் நல்லறிவை விழித்தெழச் செய்து இந்த நல்லறிவினாலே (வஞ்சக மனத்தாற் செய்த பிழைகளுக்குச்) சினங் கொள்ளாது நம்மை வளர்க்கும் குருபதத்தைக் கண்டு, இக்குருபதத்தை (முனியாமைக்கும் வளர்த்தலுக்குமாக) மேலும் மேலும் போற்றிப் பரவி இரும்பு தரும் மனம் இளகிக் கசிந்துருக வணங்கும் குரு வணக்கமே பேரின்பத்திற்கான வழியாம், இவ் வழியில் ஒருபோதும் இடர் நேராது.

இன்பதுன்பம் நலம் தீங்கு ஆதிய மாய உலகில் தோன்றும் இரவு பகல் ஏதுமில்லாத பட்டப்பகல் போல் ஒளிரும் சின்மயமான காட்சியில் கணமும் பிரியாதவர்கள் ஞானகுரவர். இவர்கள் பார்க்கும் இடமெங்கும் பரசிவத்தையே பார்ப்பார். இவர்களே எங்கும் தங்கும் பரமசிவத்தைப் பிரியாது சார்ந்து பிறவியற்சாராதிருக்கும் நற்றவத்தினர். அங்கும் இங்கும் எங்கும் பிரகாசித்திருப்பவர். இவரை எங்கும் எப்பொழுதும் கண்டு வணங்குதல் இன்பம் தருவதாகும்.

இவ்விரு பாடல்களாலும் இன்பம் தரும் குரு வணக்கம் கூறப்பட்டது.

**2. நமசிவாய மந்திர மகத்துவம்**

**'நமச்சி வாயவே நான்மறை யாகமம்**
**நமச்சி வாயவே மந்திர தந்திரம்**
**நமச்சி வாயவே நம்முட லுயிர்பொருள்**
**நமச்சி வாயவே நற்றுணை யாகுமே**

நால் வேதங்களினதும், இருபத்தெட்டு ஆகமங் களினதும் மெய்பொருளாவது நமச்சிவாய மந்திரம். சாதகரைக் கடைத்தேறச் செய்யும் மந்திரமாவதும், கடைத்தேறுதற்கான நெறியாவதும் நமச்சிவாய மந்திரமே. நமது உடல், உடலினுள் உயிர், உயிருக்கு உயிராகும் சிவம் முழுதும் நமச்சிவாய மந்திரமே. ஆதலால் நமக்கு நற்றுணையாயமைவது நமச்சிவாய மந்திரமேயாம். இதனால் நமச்சிவாய மந்திர மகிமை கூறப்பட்டது.

**3. உபதேச மந்திர மகிமை**

**'நாத னிருப்பது நற்றவர் நெஞ்சிலே**
**நாத னுரையது நான்மறை யாகமம்**
**நாதனை நாடினர் ஞான மெய்துவர்**
**நாதனை நாடி நாமறிந் தோமே'**

குருவின் நெஞ்சகத்திலே முழுமுதற்பொருளான நாதன் வீற்றிருக்கிறார். குருவிடத்திலுள்ள நாதனாகும் குருநாதன் உரைக்கும் உபதேசமந்திரம் வேதாகமங்களின் முடிவிடத்துள்ள உண்மையாகும். ஆதலால் குருநாதனை நாடி அவரிடமிருந்து நமச்சிவாய உபதேச மந்திரத்தைப் பெற்றோர் ஞானம் அடைவர். இம்முறையிலேயே நாம் குருநாதனை நாடி ஞானம் பெற்றோம். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் தமது அனுபவ சாட்சியத்தால் நமச்சிவாய உபதேச மந்திர மகிமையை அருளிச் செய்தனர்.

**4.சுவாமிகள் உபதேச மந்திரத்தால் பெற்ற அநுபூதி**

**நினையும் நினைவும் நீயன்றி வேறில்லை**
**அனையுஞ் சுற்றமும் அப்பனு மாகிய**
**தனையறி வார்கள் தற்பர மாவர்**
**பினையொன்றும் பேச விடமில்லைக் காணே'**

நினைக்கின்ற நினைப்பும் முதல்வனையன்றி வேறாக இல்லை. அன்னை தந்தை அரிய சகோதரர் ஆதிய அனைத்துமாய் நிற்பவன் முதல்வன் ஒருவனே. இவ்வாறு முழுதுமாய் இருக்கும் முதல்வனை உள்ளவாறே அறிவோர் தாமும் அம்முதலைச் சேர்ந்து தற்பரவஸ்துவாவர். இதன்பின் நன்மோன நிறைவொன்றே நிற்கும். இந்தப் பேசாநுபூதி வாய்த்ததன் பின் பேசுவதற்கு ஏதுமில்லை.

இதனால் உபதேச மந்திரப் பேறு உரைக்கப்பட்டது.

**5. சாதகரின் உபதேச மந்திர சாதனை**

இவ்வுபதேசமந்திரப் பேற்றினை உரைத்த சுவாமிகள் உபதேச மந்திரத்தைப் பெறும் பாக்கியரான சாதகர் தீவிர சாதனை இயற்றுதலாலேயே அநுபூதி பெறலாம் என்பதை மேலே கூறுகின்றார்.

**'நீயும் நானும் அவனும் அதுவும்**
**காயுந் தீயும் காலும் வானும்**
**பேயும் பூதமும் பிரானும் பிறவும்**
**ஆயும் பொழுதில் அவனாய் விளங்குமே'**

நீ, நான், அவள், அவன் ஆதிய உயிர்த்திரள் நீர், நிலம், நெருப்பு ஆதிய ஐம்பூதத் தியற்கையான உலகம் பூதகணம், அசுரகணம் , மும்மூர்த்திகள் என்னும் முழுவதையும் ஆராய்ந்து பார்த்தால் இவையெல்லாம் முதல்வன் ஒருவனே என்பது தெளிவாகும்.

**'நுண்ணிடை யவளொடு நுடங்கும் பித்தனை**
**விண்ணிடை விடைமேல் விளங்கு மொருவனைக்**
**கண்ணிடைக் கண்டு களித்த மானிடர்**
**மண்ணிடை வராரென வோதும் மறையே'**

சிவபெருமான் சிற்றிடையுடைய உமையாளொடும் கூடி உலகுயிர் இறை முழுவதும் நுழைந்து, நுடங்கி, முடங்கி நூலறிவாளரால் அறியப்படாத ஆடலை நிகழ்த்துகிறார். இவ்வாடலை மண்ணுலகில் நிகழ்த்தும் அவரே விண்ணுலகில் தரும தேவதையான எருதின் மேல் செயலேது மற்றவனாய் விளங்குகிறார். மண்ணில் அற்புதக் கூத்து நிகழ்த்துபவரும், விண்ணில் செயலறியாச் சிவனுமாயிருப்பவரை யார் உண்மை முழுவதும் என்ற கண்ணைத் திறந்து காண்கிறாரோ அம்மாதவர்க்கு மண்ணிலே பிறப்பும் வாழ்வும் இல்லை என வேதம் கூறுகிறது.

**'நூதன விவேகியர் நுழைந்துங் காண்கிலர்**
**சீதள கமலச் செல்வனுங் காண்கிலர்**
**வேத வாகமம் தாமும் விளம்பில**
**சாதனை யுள்ள சத்துக்கள் காண்பரே'**

அவ்வனுபவத்தை அதிசயமான நுண்ணறிவு படைத்த விவேகியர் நுண்மாண் நுழைபுலங்கொண்டும் அறிய மாட்டார்கள். படைப்போனான பிரதமதேவனும் இதனை அறியார். பிரமன் மொழிந்த வேதமும், வேதத் தெளிவான ஆகமும் இதனை அறியும் வழியைக் கூற வில்லை. ஒருமுகமான தீவிர சாதனை செய்யும் உண்மையர்களே இவ்வுண்மை அநுபூதியை அறிவர்.

இம் மூன்று பாடல்களாலும் சாதனை முறையும் சாதனையின் பேறும், இப்பேறு சாதனையால் மாத்திரம் சித்திக்கக் கூடியது என்பதும் கூறப்பட்டன.

**6. சுவாமிகளின் பேசாநுபூதிப் பேறு பற்றிய விவரணம்**

இவ்வண்ணத்திலே சுவாமிகள் தாம் உபதேச மந்திர தியானத்தில் கண்ட சிவதரிசனத்தை விவரணம் செய்கிறார். இவ்விவரணம் பெம்மான் இவனன்றே என்று சுட்டிக் காட்டிக் கூறும் தமிழ் வேதத்தை நினைவூட்டுவது.

**'நெற்றி நாட்டத்தர் நிமிர்புன் சடையர்**
**பெற்றமொன் றேறுவர் பேயுட னாடுவர்**
**கற்றைவார் குழலுமை காட்சிக் கெளியர்**
**விற்றூண் ஒன்றில்லா விமல ரிவரே'**

இவர் ஞானப்பிரகாசம் செய்யும் நெற்றிக் கண்ணராயுள்ளார். சோதி சொரூபத்தைக் காட்டும் நிமிர்ந்து ஒடுங்கி உயர்ந்து செல்லும் மின்னும் சடாமுடியை யுடையவராயுள்ளார். தருமத்தில் தரித்திருப்பவர் என்பதற்கு அடையாளமாக வெள்ளை எருதில் ஏறி அமர்ந்திருக்கிறார். (நாடு நலமாய் விளங்கப் பேய்களைக் காட்டிலேயிருத்தி வைத்தற் பொருட்டுப்) பேயுடன் காட்டிலே நடனமாடுகிறார். எல்லாம் அழிந்த நிலையில் எஞ்சியிருக்கும் உமையம்மையார் பூசைக்கு எளியவராய்த்தோன்றி முன் நிற்கின்றார். இவர் விற்றுண்பதற்குக் கூட ஒன்றுமேயில்லாத வெறுவெளியில் உள்ளார். மலமிலா முதல்வராயுள்ளார்.

**'நேச யோகத்தர் நெறியில் லாதவர்**
**பாச மியல்பாய் பற்றாத பான்மையர்**
**பேச வொண்ணாப் பெருமையர் பேரிலர்**
**தாசன் யோகன் தலைவன் இவரே'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் சிவமும் இரண்டல்லாத ஒன்று எனும்படி அன்பிலே ஒன்றியிருக்கிறார். சென்றடையாத திருவினையுடையவராயுள்ளார். இயல்பாகவே பாசத்தால் பற்றமுடியாத நிருமலராயுள்ளார். இவ்வாறு சிலவற்றைச் சுட்டிச்சொல்லலாமே தவிர முற்றும் சொல்லமுடியாத வண்ணம் சுட்டிறந்து நிற்கிறார். இவருக்கு ஒரு நாமமும் ஒருருவும் இல்லை. இவரே அடிமையான யோகனாகிய என்னை ஆளுடைய நாயகனாவார்.

இவ்விருபாடல்களாலும் சுவாமிகள் தாம் கண்ட சிவ தரிசனத்தைக் கூறித் தாம் அச்சிவபெருமானது தாளிணைக் கீழ் இருக்கும் சிவதொண்டன் எனக் கூறுகிறார்.

**7. சாதகர் சாதனையால் சிவத்தைச் சார்தலும் சிவம் நான் என தென்பவற்றைப் போக்கி அருளலும்**

தாம் சிவதரிசனம் பெற்றுச் சிவதொண்டனாகியமை யைக் கூறிய சுவாமிகள் சாதகர் நான் எனதற்றுச் சிவ தொண்டராதற்கு நைந்து நொந்து தியானித்தல் வேண்டும் என மேலே கூறுகிறார்.

**'நையும் மனிதர்தம் நானெனு மகந்தையைக்**
**கொய்யுஞ் சூலப் படையை யுடைய**
**கையு முடையவன் காலற்குக் காலன்**
**தெய்வ மிவனென்று சேர்குது மிவன்பதம்'**

சிவபெருமான் நைந்துருகித்தியானிக்கும் சாதகர் களின் நான் எனும் ஆணவத்தைக் கொய்து போக்கும் முத்தலைச் சூலத்தைத் தாங்கிய கையை யுடையவரா யுள்ளார். அவர் பரிந்து நன்மனத்தால் வழிபட்டிருந்த மார்க்கண்டர்க்காகக் காலனைக் காலால் உதைத்தவர். அவரே நம் ஆணவத்தை நீக்கும் தெய்வம் எனத் தெளிந்து அவர் திருப்பாதத்தினைச் சரணடைந்து தியானியுங்கள். பெருமான் நான் எனும் அகந்தையைப் போக்கியருள் வார்.

**'நொந்தவர் தம்மை நொடியினிற் காக்கும்**
**பைந்தொடி யுமையாள் பங்கன்துங்கன்**
**கந்துக மதகரிப் போர்வையன் கறைசேர்**
**கண்டனண் டத்தவர் காணாக் கடவுளே'**

அருள் செய்யும் பெருமான் இனி ஒரு கதியுமில்லை என்று நொந்து நோக்கி ஆறாக விழிபெருக வேண்டுதல் செய்யும் சாதகருக்கு நொடிப்பொழுதில் அருள் செய் வார். அவ்வாறு அருள் செய்தற் பொருட்டே அருட்கர முடைய அம்மையாரைப் பாகமாகக் கொண்டிருக்கிறார். அவர் அட்டவீரம் புரிந்த வீரியன். பெருவடிவான யானையைக்கொன்று அதன் தோலைப் போர்வையாகப் போர்த்திருப்பவர். அன்பர் அமுதுண்பதற்காகத் தான் நஞ்சுண்ட நீலகண்டன். தேவர்களாலும் காணமுடியாத கடவுள். அக்கடவுள் அருளால் நான் எனது எனும் மமதையைப் போக்குங்கள்.

இவ்விரு பாடல்களாலும் உபதேச மந்திர தியானத் தால் நான் எனது எனும் செருக்கறுத்துச் சிவனடிக் கீழ் இருக்கும் சிவதொண்டனாகும் பேறுரைக்கப்பட்டது.

**தியான மாலைப் பயன்**

**'அந்தியுஞ் சந்தியும் அன்பினில வனைச்**
**சிந்தையி னினையச் சிறப்புடை யவராய்ப்**
**பந்தம் யாவும் பற்றாது ஒழித்து**
**நந்தா வின்ப நாடடை வாரே'**

நாடோறும் அந்திசந்தி வேளைகளில் ஓம் நமசிவாய மந்திரத்தை காதலாகிக் கசிந்துருகி தியானஞ் செய்வோர் உலகிலே பாசபந்தங்கள் பற்றாத சீவன் முத்தராக வாழ்ந்து வாழ்நாள் முடிந்தபின் குறைவிலா வீட்டின்பம் துய்த்து வாழ்வர். இதனால் இத்தியானமாலை ஓதுதலின் பயன்

சிவத்தியானம் செய் செய் செய்
சிவமே நாமெனல் மெய் மெய் மெய்
அவனி அனைத்தும் பொய் பொய் பொய்
அதனை அறிந்து உய் உய் உய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவத் திருக்கோயில்களில் நிகழும் பூசைகளும் அர்ச்சனைகளும்
## அதன் மொழியும்

உலகத்திலுள்ள பொருள்கள் அறிவுடையனவென்றும், அறிவில்லாதன என்றும் இருதிறப்படும். இவ்விரண்டும் முறையே சித்தென்றும் சடமென்றும் வழங்கப்பெறும்.

சித்தென்பது உயிர். இவ்வுயிர் யாதேனும் ஒன்றைப் பற்றிநின்று செயற்படுமன்றித் தனித்து நின்று செயற்படு மாறு இல்லை. எதுபோலுமெனின் அக்கினி ஒரு பொருளைப் பற்றிநின்றுதான் செயற்படும். எனவே சித்துக்கு சடப்பொருளாகிய பிரபஞ்சம் இன்றியமை யாது வேண்டப்படும். உயிர்களின் கன்மத்துக்கீடாகச் சடப்பொருள்கள் தோன்றி, நின்று, ஒடுங்குகின்றன.

இங்ஙனம் முத்தொழிற்படும் உலகம் சடமாதலால், சடமாகிய மட்குடம் முதலியன போலத் தானே முத் தொழிற்படாது. உயிர் இச்சடப்பொருள்களைக் கூடினாலன்றிச் செயற்படாதாதலின், அவ்வுயிர் தானே இச்சடப் பொருள் களைத் தொழிற்படுத்த முடியாது. அவ்விரண்டும் இவ்வாறாகவே பாரிசேட அளவையால் இச் சடப்பொருள்களைக் காரியப்படுத்தி இவற்றையும், உயிர், பொருள்களையும் கூட்டுவிப்பான் ஒரு முதல்வன் உண்டென்பது துணியப்படும்.

மேலும் உயிர்கள் உய்தற்பொருட்டு, அஃதவாது முத்தியை நோக்கி முன்னேறுவதற்கு இம் முதல்வன் அருளியவை வேதம், ஆகமம் என இரண்டாம். அவற்றுள் வேதம் இருக்கு, யசுர், சாமம் அதர்வணம் என நான்காம். இவற்றுள் வேதம் பொது, ஆகமம் சிறப்பானவை.

இனி, ஆகமம் - காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், ஆக்குமம், சகச்சிரம், அஞ்சு மான், கப்ரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆகிகனேயம், வீரம், இரௌவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பரமேஸ்வரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டு. இவையேயன்றிச் சார்பான குமாரதந்திரம் போன்ற பல உப ஆகமங்களும் உள்ளன.

சைவத்தினதும் அதன் தத்துவக் கொள்கையாகிய சைவசித்தாந்தத்தினதும் மூலநூலாக உள்ளவை சிவாகமங் கள். இவ்வாகமங்கள் அனைத்தும் தனித்தனி சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதமென நான்கு பாதங்களை உடையன. இவற்றுள் சரியை தந்திரக்கலை எனவும், கிரியை, யோகம் மந்திரக் கலைகள் எனவும் ஞானம் உபதேசக்கலை எனவும் கூறுவர். சரியை ஆலயப் பிரதிட்டை முதலியவற்றைக் கூறும். கிரியை ஆன்மார்த்த பரார்த்த பூசை முதலியவற்றைக் கூறும். யோகம் பிராணவாயுவை அடக்கி மனதைச் சுழுமுனை வழியாகப் பிரமரந்திரத்தில் செலுத்தி, நிறுத்தி சோதி முதலியவற்றைத் தரிசித்தலைக் கூறும்.

ஞானபாதம் பதி, பசு, பாசம் என்னும் பொருளுண்மை யினையும் அவற்றின் இலக்கணங்களையும் பசு பாசத்தி னின்று நீங்கிப் பதியை அடைவதற்குச் செய்ய வேண்டிய சாதனங்களையும் அங்ஙனம் சாதித்தாற் பெறும் பேறாகிய முத்தி நிலையினையும் கூறும்.

இந்த ஞானபாதம் அனைத்தும் பொருளுண்மை, இலக்கணம், சாதனம், பயன் என்னும் இவைகளைப் பற்றிய பிற பக்கங்களை எடுத்துக் கூறி, அளவையியல் வாயிலாக மறுத்து அவற்றின் உண்மையைப் பொதுவகை யாகவும் சிறப்பு வகையாகவும் கூறும். ஆதலின் சிவாக மங்களின் ஞானபாதமே சித்தாந்தமாகும்.

வேதம், ஆகமம் அனைத்தும் வடமொழியிற்றான் சிவ பெருமானால் தோற்றுவிக்கப் பெற்றவை. வேதங்களுக்கு எழுத்து இல்லை. கர்ணபரம்பரையாகவே இருந்து வந்தன. ஆகமங்கள் பூர்வகாலத்திலிருந்தே எழுத்தில் உள்ளன. கிரந்த எழுத்தில் உள்ளன.

**"கேவேடராகிக் கெளிறது படுத்தும்**
**மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்**
**மற்றவை தம்மை மகேந்திரத்திருந்து**
**உற்றவைம் முகங்களாற் பணித்தருளியும்"**

கீர்த்தித் திருவகவல் - திருவாசகம்

மகேந்திரமலை தெற்கின்கண் இருந்தது. "மாவேட்டாகிய ஆகமம் வாங்கியும்" - பெரிய ஏட்டின் கண் அமைந்த ஆகமங்கள் இருபத்தெட்டினையும் மகேந்திரமலையின்கண் இருந்து, பொருந்திய தன் ஐம் முகங்களால் உபதேசித்தருளியும் என வருதல் காண்க.

ஆகமங்கள் முன்னொருகாலத்தில் தமிழில் இருந்தன என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. இப்படிச் சொல்லி மயங்குவதிற் பயன் எதுவும் இல்லை. அது வெறும்பேச்சாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஆரியம் தமிழோடிசையானவன்" இது - திருநாவுக்கரசர் திருவாக்கு**

**"வேண்டத் தக்க தறிவோய் நீ, வேண்ட முழுவதும் தருவோய் நீ"**

- திருவாசகம்

மோட்ச முன்னேற்றத்துக்குத் தந்திரம், மந்திரம், தோத்திரம் என்பவை மூன்றும் இன்றியமையாதவை. இவை சிவபெருமானின் சங்கற்பம்.

எனவே சிவபெருமான் முதல் இரண்டையும் ஆகமவாயிலாகவும் ஸ்ரீருத்ரம் போன்ற மந்திரங்களை வேதம் வாயிலாகவும் வடமொழியில் தோற்றுவித்தனன். தோத்திரங்களைத் திருமுறைகளாக அருளாளர்கள் வாயிலாகத் தோற்றுவித்துள்ளான். இக்கோட்பாட்டை ஒத்த நிலையில் உள்ளவர்கள் தலையீடு செய்வதும் மொழிபெயர்த்து திருக்கோயில்களில் நடைமுறைக்குக் கொண்டுவர எத்தனிப்பதும் சிவநிந்தைச் செயலாகும். சைவ மக்கள் இக்கொள்கை உள்ளவர்களைக் கடுமையாக எதிர்ப்பார்கள். இது ஒரு பேரியக்கமாக வெடிக்கும்.

மெய்கண்டாருக்கு முன் முழுமையான சைவசித்தாந்த சாத்திரம் தமிழில் இல்லை. சைவ சித்தாந்தத்தின் தமிழ் மூலநூல் சிவஞானபோதம்.வழிநூல் அருணந்தி சிவாசாரியார் அருளிய சித்தியார், உமாபதி சிவாச்சாரியார் அருளிய சிவப்பிரகாசம். திருவருட்பயன் முதலிய துணை நூல்கள். இந்த நூலாசிரியர்கள் அருளாளர்கள்: முற்றுமுணர்ந்தவர்கள்.

திருக்கைலாசத்தில் கல்லால மர நிழலிலே தட்சணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்த சிவபெருமான் பால் எல்லா ஆகமப் பொருள்களையும் மலைப்பற விளக்கும் சிவஞானபோதத்தை உபதேசம் பெற்ற திருநந்தி மரபிலே வந்த பரஞ்சோதி மகாமுனிவர் மெய்யுணர்வில் முற்றுப்பேறுடைய திருவெண்ணைநல்லூர் சுவேதவனப் பெருமாளைக் கண்டு, அவருக்குத் தீட்சை புரிந்து, தாம் தம் குருவாகிய சத்திய ஞான தரிசினிகள்பாற் கேட்டவாறே சிவஞானபோதத்தை விளங்க உபதேசித்து, அதனைத் தமிழ் பேசும் சைவமக்கள் உய்யும்படி தமிழில் அருளிச் செய்தார். எனவே தமிழ் சிவஞானபோதத்தின் பூர்வநூல் வடமொழியிலுள்ள இரெளரவ ஆகமமாகும். இது போலத்தான் கம்பராமயணத்துக்கும் வால்மீகி இராமாயணத்துக்கும் உள்ள ஒற்றுமை. இவை இரண்டும் வெறும் மொழிபெயர்ப்புக்கள் அல்ல. வழி நூல்களுமல்ல, சார்பு நூல்களுமல்ல, தனி நூல்களே!

வேத ஆகமங்களின் மொழிபெயர்ப்பை வைத்துத் திருக்கோயில்களிற் கிரியைகளை நடத்துவது தீம்பழத்தின் சுவையை உண்டு அநுபவிக்காது வெறும் தோலை உட்கொள்வதற்குச் சமமாக இருக்கும்.

1925ஆம் அண்டளவில் மறைமலை அடிகளும், கா சுப்பிரமணியபிள்ளை அவர்களும் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினர். சைவப்பெரியார்கள் சு. சிவபாதசுந்தரனார், ஜே.ஐம்புலிங்கபிள்ளை, சீ கே சுப்பிர மணிய முதலியார் (பெரியபுராண ஆய்வுரை ஆசிரியர்), அச்சுவேலி குமாரசுவாமிகள் குருக்கள் ஆகியோர் தனித் தமிழ்க் கொள்கையை மறுத்தனர். 1946ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தில் சைவ மாநாடு ஒன்று நடத்தப்படுவ தாக இருந்தது. இம்மாநாட்டுக்குத் தலைவராக மறைமலை அடிகளின் சீடரான இளவழகனார் என்பவரை அழைப்பதற்குச் சபையினர் தீர்மானம் செய்து அவரும் அழைப்பை ஏற்றுக்கொண்டபின் போக்குவரத்துக்குரிய பணமும் அனுப்பப்பட்டது. இதை கேள்விப்பட்ட சு சிவபாதசுந்தரனார் கூறியதாவது,

"இந்தியாவிலிருந்து அம்மை நோய் முதலியன இலங்கையிற் பரவுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இருக்கின்றன. தனித்தமிழ்க் கொள்கை இலங்கையிற் புகுவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டமும் இல்லை." எனக் கூறிக் கவலைப்பட்டார். இளவழகனாரை அழைக்கவேண்டாம் என்று சபைக்குக்கூறினார். பிரயாணத்துக்குரிய பணத்தை அனுப்பிவிட்டோம் என்று சபையினர் கூறினர். பணம் போனாலும் பரவா யில்லை, அவரை அழைக்கவேண்டாம் என்று சபையினரைக் கேட்டுக்கொண்டார். அவரின் சொல்லைக் கேட்டுச் சபையினரும் இளவழகனார் அழைப்பை நிறுத்திவிட்டனர்.

இன்று மேல்நாடுகளில் குடியேறிய ஈழத் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ் பேசத் தெரியாதவர்களாக உள்ளனர். இப்படியான ஒரு புதுத் தலைமுறை உருவாகிறது. ஆனால் சைவ சமயக் கோட்பாட்டைக் கைவிடவில்லை. அவர்கள் அங்குள்ள திருக்கோயில் வழிபாட்டில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் நாளடைவில் திருக்கோயிற் பூசைகள் ஆங்கிலத்தில் செய்யப்படவேண்டும் என்று கேட்கக் கூடும்: ஆச்சரியப்படுவதற்கில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிவதொண்டன்

சுபகிருது வருடம் ஐப்பசி - கார்த்திகை

மலர் : 86 (2022 நவம்பர் - டிசம்பர்) இதழ் : 11 - 12


## நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்

சிவதொண்டன் ஏட்டின் இவ்வுரையின் நடுவண் இலங்கும் வசன நற்சிந்தனையில் "ஆன்றோரும் நின்னா வார் பிறரின்றி நீயேயானாய்" என்று சொல்லியிருக் கிறார்கள் என்ற வாசகம் உள்ளது. நற்சிந்தனையிலுள்ள ஒரு பாடல் "பொன்னானாய் மணியானாய்" எனத் தொடங்குகிறது. இம் மொழி "நின்னாவார் பிறரின்றி...." எனத் தொடங்கும் அப்பரடிகளது தேவாரத்திலுள்ள ஒரு மொழியேயாகும். மேலும் இத்தேவாரத்திலுள்ள "என்னானாய் என்னானாய்" என்ற மொழியும் இந்த நற்சிந்தனையில் இரு இடங்களில் இடம்பெற்றிருக் கிறது. ஓதுக அதுநாம் ஓம் தத்சத் ஓம் முடிவிலுள்ள செய்யுள் மேல்வருவது :

"நின்னாவார் பிறரில்லை எல்லாம் நீ
சொன்னார் முன்னோர் தோத்திரஞ் செய்து
பன்னாள் இப்படிப் பயிலப் பயில
என்னாயகமே எனக்கறிவுண்டோ
ஓதுக வதுநாம் ஓம் தத்சத் ஓம்"

இம்மந்திரப் பாடலிலே அப்பரடிகளது தேவாரத்தின் சொல்லும் பொருளும் சொல்லப் பெற்றிருக்கிறது. மேலும் இதனை எந்நாளும் அழுத்தி அழுத்திப் பயின்று தெளிந்து கொள்ளும் அறிவினை அருளுமாறு நாயகமாகிய பொருளான சத்தியவஸ்துவிடம் வேண்டப் பட்டுள்ளது. ஈதெல்லாம் இத் தேவார மொழியிலும், மொழிப் பொருளிலும், இப்பொருளைப் பயின்று தெளிவதிலும் ஈடுபாடு கொள்ளுமாறு எங்கள் சுவாமிகள் எமக்கு உணர்த்துவதை விளக்கம் செய்கின்றன.

சுவாமிகள் "நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்" என்ற ஆன்றோர் வாக்கை ஆணித்தரமாக நிறுவுதற் பொருட்டே நற்சிந்தனையில் பலவிடத்தும் எடுத்தாண்டிருக்கின்றனர். அக் குரு வாசகத்தின் சாரம் யாதெனில் "கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை, யாவும் அவன் செயல்" என்பது. இதனை ஓர் மகாவாக்கியமாக குருநாதரிடம் கேட்டுப் பன்னாளும் சிந்தித்துத் தெளிந்து உறுதியுற்று அனுபவித்துச் சுவாமிகள் துணிந்திருந்தார். அந்த மகாவாக்கியம் "உண்மை முழுதும்" என்பதே.

இவ்வுரையின் நடுநாயகமாயுள்ள நற்சிந்தனை உரைப் பகுதியிலே ஆத்மாவுக்கும் சரீரத்துக்கும் உள்ள வேறுபாட்டை ஆணிவேறு அக்குவேறாகப் பிரித்துப் பிரித்துக் காட்டி சுவாமிகள் நிறுவுகிறார். இவ்விரண்டையும் சரியென்று சொல்வது பெரும் பாவமும் பழியும் எனக்கூறுகிறார். இவ்விரண்டையும் ஒப்பிட்டுக் கூடப் பார்ப்பது பெரும் பழியென சரீரத்தை ஒதுக்குகிறார். தன்னைச் சரீரி என நினைப் பவனைக் கீழ்மகன் எனக் கருதி அவனுக்காக 'ஐயோ' என பரிதாபப்படுகிறார். தன்னை ஆத்மா என நினைப்பவனை உண்மை அறிவாளி எனவும் அவனுக்கு இணையாக ஒரு தெய்வமுமில்லை எனவும் போற்றுகின்றார். இவ்வாறு போதுமளவு கூறிச் சரீரம் வேறு ஆத்மா வேறு என எண்ணுமாறு நிறுவிய சுவாமிகள் இந்நியாயங்களையெல்லாம் உலகத்துக்கும் பொருந்துமாறு செய்து உலகையும் உண்மையின் வேறு என முறையிடுகிறார். முடிவில் உலகமும் சரீரமும் வேறாயிருக்கின்றது என எண்ணுவது பெரும் பழி என்றும் கடவுளைத்தவிர வேறொன்றுமில்லை என்றும் வலியுறுத்துகின்றார். இவ்வாறு வலியுறுத்துவதன் முடிந்த முடிவுயாதெனில் முழுவதுமானவை மோகம் எனத் தள்ளப்பட வேண்டியவை; உண்மை ஒன்றே கொள்ளப்பட வேண்டியது என்பதாம்.

சுவாமிகளுக்கு முழுவதும் என்பது ஓடு போன்றது. உண்மை புழியம்பழம் போன்றது. முழுவதும் தாமரையிலையை ஒப்பது. உண்மை தண்ணீர் போன்றது. அவர் ஒட்டியும் ஒட்டாமலும் வாழும் ஒழுக்கத்தினர். ஆனால் நம் போன்றவர்களுக்கோ முழுவதும் என்பதற்கும் உண்மை என்பதற்கும் உள்ள சம்பந்தம் பிரிக்கமுடியாததாயுள்ளது. அச்சம்பந்தம் பண்ணும் இசையும் போன்றது, எள்ளும் எண்ணெயும் போன்றது, பாலும் பாலில் கலந்த நெய்யும் போன்றது. ஓம், அது அப்படித்தான் உள்ளது. அது நாம் காணும் கண்ணிற் கலந்து நிற்கிறது. காதிற் கலந்திருக்கின்றது. நமது ஊனுடம்பு, உடம்பிலுள்ள உணர்வு, உணர்வுக்குள் இருக்கும் உயிர் எல்லாவற்றிலும் கலந்திருக்கின்றது. அவ்வாறே நீர், நிலம், தீ, காற்று, ஆகாயம் எல்லா வற்றிலும் கலந்தும் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல், பூண்டு, கல், மண், நிற்பன, நடப்பன எல்லாமாயும் எல்லாவற்றிலும் செறிந்தும் இருக்கின்றது. இவ்வண் ணம் எல்லாமாயிருக்கும் அதுவே யாதொன்று மல்லாததுமாயிருக்கிறது. சுவாமிகளது 'ஓம் தத் சத் ஓம்" மந்திரமொன்று இதனை நம் அகத்தில் நன்றாகப் பதியு மாறு கூறியிருக்கின்றது.

' ஊனாய் உணர்வாய் உயிருக்குயிராய்.
நானாய் நீயாய் நன்மையாய் தீமையாய்
வானாய் மதியாய் வாயுவாய்த் தேயுவாய்
தானாய் நின்றான் சச்சிதானந்தனே
ஓதுக அதுநாம் ஓம் தத் சத் ஓம்'

இவ்வண்ணம் முழுவதிலும் சிறு மண்துகள் கூட நீங்கலாகாத வண்ணம் எல்லாவற்றிலும் செறிந்தும், இவையொன்றிலும் ஒட்டாதவாறும், ஒன்றுக்கும் தட்டாததாயும் உள்ள அந்த உண்மையில் நாம் உறைத்து நிற்பது எவ்வாறு? 'நீரொழியப் பாலுண் குருகு' என்று முன்னோர் கூறிய மொழியொன்றுள்ளது. அன்னம் பாலிலுள்ள நீரைத் தவிர்த்துப் பாலைப் பருகும். அவ்வாறு நாம் முழுதிலுமுள்ள உண்மையைக் கொள்வது எவ்வாறு? அப்பரடிகளது தேவாரமொன்று நம்மில் பலருக்கும் மனனமானது. 'விறகிற் தீயினன் பாலிற் படு நெய் போல்' என தொடங்கிச் செல்லும் அத் தேவாரத்திலே 'உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே' என்ற வாசகம் வருகிறது. இவ்வாசகத்திலே முழுவதிலுமுள்ள உண்மையைக் கொள்ளும் வழிமுறை உள்ளது.முதலில் உண்மையோடுறவு கொள்ள வேண்டும். அதாவது உண்மையைச் சார்ந்து ஒழுக வேண்டும். முழுவதன் சார்பு கெட வேண்டும். இவ்வாறு முழுவதன் சார்பை விட்டு உண்மையைச் சார்ந்து அவ்வுண்மையையே உணர்ந்து உணர்ந்து இருக்க வேண்டும்.தேவாரத்தில் கூறப்பட்டிருப்பது போல் அது முறுக வாங்கிக் கடைவதாக இருக்க வேண்டும்.

இதனையே சுவாமிகள் நற்சிந்தனை எனக் கூறினார். இந்த நற்சிந்தனையை ஆழ நீளமாக நினைத்தல் என்று ஓரிடத்தில் கூறினார். இது ஆழ்ந்தகன்றோங்கிய உண்மையைத் தொடுதற்கான தியானமாகும். இன்னோரிடத்தில் எண்ணாமல் எண்ணுதல் எனக் கூறினார். இது 'மற்றுப் பற்றெனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளது தேவார மொழியை நினைவூட்டுகிறது. முழுவதிலும் யாதொன்றையும் எண்ணாமல் உண்மை ஒன்றையே நினைத்திருக்கும் தியானமாக இது உள்ளது. இன்னுமோரிடத்தில் 'எள்ளத்தனையும் மறவாது ஏத்துதல்' என சுவாமிகள் கூறினார். இதனை இடைவிடாத் தியானம் எனலாம். இவ்வாறே தாகமாகவே தாம் நினைதல், மையல் தீர நினைதல், நன்றாக நினைதல், தூங்காமல் நினைதல், கௌரவமாக நினைதல் என்றெல்லாம் சுவாமிகள் ஆங்காங்கே கூறினார். 'நினைத்தாற்றான் காணலாம்' என்பது சுவாமி களினது இன்னோர் மொழி. இந்த நினைவைச் 'சிவோகம் பாவனை' என்ற தலையங்கத்திலுள்ள உரைப்பகுதி ஒன்றில் சுவாமிகள் மேல்வருமாறு கூறினார்.

'தெய்வத்தை நம்பு. முழு மனத்தோடு நம்பு உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. இருக்கும் போதும் நிற்கும் போதும் நடக்கும் போதும் கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலும் தெய்வம் எனும் நினைவே நிறைவதாக; நானில்லை கடவுளே இருக்கிறார் என எண்ணு'

ஆதலால் உண்மை முழுதும் என்பதை உணர்தற்குரிய சிறந்த சாதனமாகச் சுவாமிகள் தியானத்தையே கொண்டனர் எனத் தெரிகிறது.

மேலும் 'அவற்றை (இந்திரியங்கள்) வெல்வதற்கு சிவத் தியானம் செய்க', மனத்தை ஒருவன் அடக்கி வெற்றி கொள்ள முழுமனதோடு விரும்புவானானால் சிவத் தியானத்தைத் தினந்தோறும் செய்து வரக் கடவன் என்றும் கூறினார்.

இவ்வாறான சிவத் தியானத்தை தியானம் செய்தல் என்பர். செய்தல் எனவே அது ஒரு வேலை. 'தியானம் செய்தலும் ஒரு வேலை' எனச் சுவாமிகள் சொல்லியிருக்கிறார். இவ் வேலையாகிய தியானத்தை மயானம் எனக் கூறுவர். மயானத்தில் எரித்தல் நிகழ்வது போன்று தியானத்தில் வீணாண எண்ணங்கள் எரிக்கப்படுகின்றன. மயானம் என்ற சொல்லிலும் 'யாகம்' என்ற சொல் சாலச் சிறந்தது.யாகத்திலே ஓம குண்டத்தில் அவிபாகங்களைச் சொரிந்து சிவாக்கினியை எழுப்புவர். சுவாமிகள் சிவ தொண்டர்க்காக நியமம் செய்த யாகம் அந்தர் யாகமாகும். அந்தர் யாகத்திலே அக குகையாகிய ஓம குண்டத்தில் வீணான எண்ணங்கள் எரிக்கப்பட்டு சிவ சோதி எழுப்பப்படும். பொறி வழியே போயலை யும் மனம், தந்தை, தாய், மைந்தர் எனும் பந்தம், தேகமே மெய்யெனும் மோகம், இருவினைக் கட்டு, கோலங்களை மெய்யென எண்ணும் அஞ்ஞானம், நான் எனும் ஆணவம் ஆகிய முழுவதும் எரிக்கப்பட்டு உள்ளொளி ஓங்குகிறது. இத் தியான சாதனை தன் வலத்தாற் செய்யப்படுவதன்று. குருவின் வழிகாட்டு தலால் சத்தியப் பொருளாகவே இருக்கும் குருவின் அருளாலேயே செய்யப்படுவதாகும். அதாவது சித்தத்தில் திகழ்பவரும், எங்கும் செறிந்த வருமான சற்குரு உள்ளென்றும் புறமென்றும் அறியொணாதவாறு நின்று அருளைப் பொழிய உள்ளத்திலும் முழுவதிலுமுள்ள மோகமூட்டும் அம்சங்களையெல்லாம் எரித்து உண்மை ஒன்றையே ஒளிரச் செய்வதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்சிந்தனை

# குருவாசகம்

ஆத்துமா நித்தியமானது பிரிவில்லாதது. பூரணமானது. சரீரமோ அழியுந் தன்மையுள்ளது பிரிவுள்ளது. இப்படியிருக்கையில் நாங்கள் இவ்விரண்டையுளும் சரியென்று சொல்ல முடியுமா? அப்படி நாங்கள் சொன்னால் இதிலும் பெரிய பாவமும் பழியும் வேறுண்டோ?

ஆத்துமா எல்லாவற்றுக்கு மாதியாயுள்ளது. யாவையும் ஆள்கின்றது.

சரீரமோ தொடக்கமுடையது. ஆளப்படுந் தன்மையுடையது.

இப்படியிருக்கையில் நாங்களிவ் விரண்டையும் ஒன்றோடொன்று ஒப்பிட்டுப் பார்க்க முடியுமா? அப்படியொப்பிட்டால் இதிலும் வேறு பழி கிடையாது.

இயற்கையிலே ஆத்துமா அறிவுடையது, தூய்மையானது. சரீரமோ அறியாமையுடையது தூய்மையற்றது. இவ்விரண்டையும் ஒப்பிட்டால் இதிலும் அஞ்ஞானம் பிறிதுண்டோ?

ஆத்துமா பிரகாசமுடையது. அதாவது சுயம்பிரகாசமுடையது. சரீரமோ இயற்கையிலே இருள்மயமானது. இவ்விரண்டையும் ஒப்பிடலாமா?

யாரொருவன் தன்னைச் சரீரியென்று நினைக்கின்றானோ ஐயோ, அவனிலுங் கீழ்மகன் யார்?

யார் ஒருவன் தன்னுடைய சரீரமென்று சொல்லுகிறானோ அவன் மட்பிண்டத்தைத் தன்னுடையது என்று சொன்னது போலிருக்கும்.

யார் ஒருவன் தன்னைப் பூரணனென்றும் நித்தியன் என்றும் இயற்கை அறிவுடையவனென்றும் நினைக்கின்றானோ அவன் உண்மை அறிவாளி. அவனுக்கிணையாக ஒரு தெய்வமுமில்லை.

யார் ஒருவன் தன்னை ஓர் அழுக்கும் பற்றமாட்டாதென்றும் மாறுபாடில்லாதவனென்றும் தூய்மையிலுந் தூய்மையென்றும் நினைக்கின்றானோ அவனை அறிவாளிகள் ஞானியென்று சொல்லுவார்கள்.

வேதம் ஆகமம் யாவும் இந்த உலகம் முழுவதும் தெய்வமே நிறைந்திருக்கிறதென்றும் அதை விட வேறு யாதுமில்லையென்றும் முறையிட, நாங்கள் எப்படி உலகமிருக்கிறது, சரீரமிருக்கின்ற தென்றுநினைக்கலாகும்? அப்படி உலகஞ்சரீரம் வேறாயிருக்கின்றதென்றால் இதைவிடப்பழி பிறிதுண்டோ? ஆன்றோரும் 'நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னோரன்ன பல காரணங்களாலுங் கடவுளைத் தவிர வேறொன்றுமில்லை, யாவு மவன் செயல்.

சொல்லெல்லாம் மோனம்
தொழிலாதியும் மோனம்
எல்லாம் நன்மோன நிறைவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான தியான சாதனை 'முதிர முதிர முழுவதும் உண்மை' என முகமுகமாகத் தோன்றும் நிலை வாய்க்கும். இவ்வாறு கண்டதும் முழுவதையும் நினையும் நினைப்பு அற உண்மை ஒன்றிலே நினைப்பு மறப்பற்றிருக்கும் இருப்புப் பொருந்தும். இந்த இருப்பையே சுவாமிகள் உண்மையான தியானம் என்று கூறுவார்கள். 'தியானம் என்பது எதனையும் எண்ணிக் கொண்டிருப்பதல்ல அது சும்மா இருத்தல்' என்பது சுவாமி வாக்கு. இதனை சுவாமிகளது பாடல் ஒன்று நயம்படக் கூறுகிறது.

'சித்திரக்காரன் தீட்டிய தீபம் போல்
நித்திய வஸ்துவில் நினைப்பு மறப்பு அற
முத்தியில் இருக்கும் முறை'

என அப்பாடலில் உள்ளது. இதனை திருவாசகத்தை ஓதி இன்புறும் அன்பர்கள் மணிவாசகமாக மனத்தில் பதித்திருப்பார்கள். இன்றெனக்கருளி எனத் தொடங்கும் திருவாசகத்திலுள்ள 'நினைப்பற நினைந்தேன்' என்பது அவ்வாசகம். இந்த நினைவு 'இறவாத இன்ப அன்பு' எனவும் அருளாளரால் வழங்கப்பட்டது. இதனைக் 'கணமும் மறவாதிருத்தல்' எனவும் சுவாமிகள் கூறுவார்கள். சுவாமிகள் இந்த அனுபவ சுகத்தில் திளைப்பவர் ஆதலால் தன்னை 'மறவாதவன்' என அவர் கூறுவார்.

இந்த அனுபவத்தைக் கூறியுள்ள திருவாசகத்திலே 'நின்ற நின் தன்மை... நீயலாற் பிறிது மற்றின்மை, ஒன்றும் நீயல்லை அன்றி ஒன்றில்லை என்ற மாணிக்க மொழிகளும் வருகின்றன. இதில் சிவபெருமானின் தன்மை அல்லது சத்தியப் பொருளின் இயல்பு ஒருவாறு விளக்கப்படுகிறது. சிவபெருமானை அல்லாது உலகில் வேறொன்றுமில்லை. ஆயின் உலகம் முழுவதிலும் உள்ளவற்றில் யாதொன்றும் அவராகா. அவர் யாவையு மாய் அல்லையு மாய் இருக்கிறார்.

இதனையே திருநாவுக்கரசு சுவாமிகள் " நின்னாவார் பிறரின்றி நீயேயானாய்" எனத் திருத் தாண்டகம் பாடித் தோத்திரம் செய்தார். இந்த தமிழ் மறையின் பொருள் விளங்கும் வண்ணமாகச் சுவாமிகள் "நின்னாவார் பிறரில்லை எல்லாம் நீ" என்று 'ஓம் தத் சத் ஓம்' எனும் மந்திரப் பொருளாக ஓதினார்.

இவ்வருமைத் திருவாக்குகள் கூறும் அனுபவஞானத்தைச் செல்லப்பாசுவாமிகள் பயிலுந் தமிழில் பகர்ந்துள்ளார். இரு சொற்களால் அவர் மொழிந்த ஞானம் உண்மையைப் போன்றே எளிமையாக உளது. உண்மை முழுவதும் என்பது அவர் கூறிய மகாவாக்கியத்தில் உள்ளபடி உண்மை ஒன்று உளது. அதுவே முழுதுமாய் ஒளிர்கிறது. ஒன்றேயான உண்மை ஒன்றுக்கும் எட்டாததாக உளது. அது புதிதாக புதிராக உளது. அதனைக் கண்டவர் உளரேனும் அவர்கள் விண்டு சொல்லியதில்லை. அது என்றும் பரமரகசியமாக உளது. அதனை யாதொரு அழுக்கும் பற்றாது. அது மாயைக்குச் சூழொணாதது. நிருமலமானது. பரிசுத்தமானது. அந்த ஒரு பொருளே முழுதுமானது. அது அண்டசராசரம் அனைத்துமாயுள்ளது. அனைத்திலும் அணுப்பிரமாணமும் தவறாது செறிந்திருக்கிறது. அது அல்லாது ஒன்றுமேயில்லை. அதே வேளை அது எதனுடனும் ஒட்டாததாகவும் உள்ளது. அது யாவையுமாய் அல்லையுமாயுள்ளது. அது ஒன்றுமன்று. அதனையன்றி ஒன்றுமில்லை. முழுவதிலும் ஒன்றும் உண்மையன்று. உண்மையன்றி முழுவதிலும் ஒன்றுமில்லை. இந்த 'இரண்டற்ற ஒன்றில்' முழுவதிலும் ஒன்றையும் காணாது நீங்காத நின்மல நிட்டையிலும் இருக்கலாம். முழுவதிலும் உண்மையை கண்டு ஆடிப் பாடி மகிழ்ந்தும் இருக்கலாம். செல்லப்பா சுவாமிகள் ஓவியம் போலவும் இருந்தார். சிங்கார நடையும் சிரிப்புமாய் உல்லாசமாகவும் திரிந்தார். சுகப்பிரம ரிஷி ஞான நிட்டராயிருந்தார். ஜனக மகாராஜா பாராண்டு கொண்டே நிட்டானுபூதியில் நிலைத்திருந்தார்.

யோகசுவாமிகள் சந்ததம் மோன நிலை தவறாதவராயும் இருந்தார். சதா சிவ தொண்டு புரிந்தும் இருந்தார். இவ்வாறு சகசஸ்திதியினராய் இருப்பதற்குரிய ஞானாநுபூதியை உண்மை முழுதும் என்ற ஞான வாசகம் அவருக்கு அளித்தது. அந்த அனுபவ சித்தாந்தத்தையே அப்பரின் வாய் மொழியைச் சான்றாகக் கொண்டு "நின்னாவார் பிற ரில்லை எல்லாம் நீ" என்று கூறியருளினார்.

இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

-திருவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The

# Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

(November - December 2022 )

Volume: 86

Issue : 11- 12

## NATCHINTHANAI

### THE SERVANTS OF SIVA

Refrain: To service are we ever pledged
We are the servants of Siva.

In the universe, in each creature
It is the Lord we see.
To service...

We will not suffer from the onslaught of disease;
We will not come again to a mother's womb.
To service...

All past karma has flown away;
The whole world has become our kin.
To service...

Getting and giving through countless generations.
We live for ever, ever liege men of the Lord.
To service...

Vedanta and Siddhanta we do not see as different;
We are yearning for the path to liberation.
To service...

At all times repeating- 'Śiva, Śiva'
In our hearts we affirm that Jiva is Śiva.
To service...

All things we see from where we are;
In the world we live as befits our lot.
To service...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமொழிகளில் எங்கள் ஆசான் அருள்மொழிகள்

350 எண்ண அலைகளோடு ஒப்பிடும் போது மின் அலைகள் அற்பம். மற்றவர்களது எண்ண அலைகள் என்னைத் தமது இலக்காகச் செய்வதோடு வந்து என்னில் மோதுகின்றன.

Electric waves are nothing compared with thought waves. The thoughts of others make me their target and come and dash against me.

351 நீ சும்மா இருந்தால் வெளியேயுள்ள குரல்களின் சத்தங்கள் உன்னிடம் வராது. நீ கீழே இறங்கும் போது உன்னால் உல கத்தைப் பார்க்க முடியும்.

If you remain summä, the sound of voices outside will not reach you. When you come down, you can see the world.

352 உலகம் எப்போதும் தூய்மையானது. நீ வெளிநோக்கிப் பார்க்கும் போது நீ நாயையும் பூனையையும் காண்பாய். நல்லதையும் கெட்டதையும், பெரியதையும் சிறியதையும் காண்பாய். இது ஒரு மிக அருமையான உலகம். இந்த உலகம் பரிசுத்தமானதும் இரகசியமானதும் ஆகும்.

The world is always pure. When you look outwards, you see the dog, the cat, 'good' and 'bad', 'great' and 'small'. This is a very fine world. The world is sacred and secret.

353 சீவன் சிவன் என்று கூறி ஓ ஆடுமயிலே. உண்மை பழுக்கிறது என்று கூறி ஓ ஆடு மயிலே. சிவன் சிவன் என்று ஆடுமயிலே உண்மை முதிருதென்று.

(Swami sang:) Dance O peacock, saying Jiva is Šiva. Dance O peacock, and say that Truth is ripening.

354 இந்த மரம் கடவுள். இந்தக் கத்தி கடவுள். இந்தக் கல் கடவுள்: சாராயம் கடவுள். நான் அவை எல்லாவற்றையும் தலைசாய்த்து வணங்குகிறேன்.

This tree is God, this knife is God, this stone is God. Arrack is God. I bow down to them all.

355 ஐந்து கோசங்களுக்கும் அப்பாற்பட்ட சும்மா இருக்கின்ற நிலை நீவிரும்பும் போது வராது. அது தனது சொந்த விருப்பத்தின் படிவரும். ஒரு நாள் நான் அந் நிலையில் இருந்த போது ஒரு பறவை வந்து எனது தலையில் அமர்ந்தது. யோகிகளும் ஞானிகளும் கூட அந்நிலையைப் புரிந்து கொள்ள முடியாது.

The state of being summä, which is beyond the five koshas (sheaths) will not come when you want it. It comes of its own accord. One day, when I was in that state, a bird came and sat on my head. Even yogis and jnänis can't understand that state.

356 உன் உள்ளே இருப்பவரை வணங்கி அறி உன்னைப் பாது காக்க அவரை விட வேறு ஏதாவது கடவுள் உனக்கு வேண்டுமா?.

Do worship and know Him who is within you. Do you require any God other than Him to protect you?

357 உண்மை பேசுவதாயின் (வேறொரு அடியவர்) அவரும் நானும் ஒன்றே. ஆனால் அவர் அறியார். வெளிப்பார்வைக்கு நாம் இருவராய் தோன்றுகின்றோம்.

To speak the truth, you (another devotee) and I are one. But he does not know that. Outwardly we seem to be two.

358 கடவுள் எங்கள் எல்லோரோடும் உள்ளார். பின்பு ஏன் நாம் மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்த முயற்சிக்க வேண்டும்.

God is with all of us. Then why should we try to dominate others?

359 யாரை நீ வழிபடுகிறாய்? என்னை அல்ல ஆனால் குருவையே.

Whom are you worshipping? Not me, but the guru.

360 கோவில்களையும் கல்லூரிகளையும் கட்ட வேண்டு மென்று உனது தலையை உடைக்க வேண்டிய தேவை யில்லை. சும்மா இருப்பதன் மூலம் உன்னால் பேரா னந்தத்தை அனுபவிக்க முடியும். அது ஒரு பம்பரம் சுற்றி சுற்றி ஓடிய பின் இறுதியாக அமைதிக்கு வருவதை ஒக்கும். வலு இருக்கும் வரை ஒரு பம்பரம் சுற்றிச்சுற்றி ஓடிக் கொண்டிருக்கும்.

It is not necessary to break your head over building temples and schools. You can experience bliss by remaining summä, like a top, which finally comes to rest after spinning round and round. A top will go on spinning as long as the force is there.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமொழிகளில் எங்கள் ஆசான் அருள்மொழிகள்

| | | |
|---|---|---|
| 361 | உனக்கு ஊடாக உன்னை அறிவது ஒரு பிரச்சினை அல்ல. நீ உனக்கு ஊடாக உன்னைக் காணவேண்டும். | It is not a question of knowing yourself through yourself. You must see yourself through yourself. |
| 362 | மனம் தூயதாக இருக்குமானால் அது எல்லா யோகாசனங் களுக்கும் சமம். | If the mind remains pure, that is equal to all Yoga äsanas. |
| 363 | தூரம், கிட்ட என்று பேசுவது வெறும் மாயையே. | It is mere illusion to speak of 'far' and 'near'. |
| 364 | யார் பிறப்பது? யார் இறப்பது? | who takes birth? who dies? |
| 365 | 'நாம் எங்களை அறிந்து கொள்ளவில்லை' என்று சிந்தித் துக் கொண்டு உனக்காகத் துக்கத்தை உணர். | Feel sorry for your selves, thinking, "We have not known ourselves". |
| 366 | ஒருவருக்கு தன்னை அறியும் நோக்கம் இருக்கும் போதும் ஏனைய எல்லா உலகப் பற்றுக்களும் மறையும் போதும் ஆத்ம தரிசனம் வரும். நீ உனக்குள்ளேயே கடுமையாக அழுத்த வேண்டும். நீ அதைச் செய்தால் நீ ஆத்ம தரிசனம் பெறுவாய். உனக்கு நூல் அறிவை பெறும் விருப்பம் கூட இருக்க வேண்டியதில்லை. கருப்பம் சாற்றை எடுக்கக் கரும்பை நீ நசுக்க வேண்டும். எல்லோருக்காகவும் சும்மா இரு. | Ätmä daršsan will arise, when one has the aim of knowing oneself, and when all other attachments disappear. You must press hard within yourself. If not even have the desire for scriptural knowledge. You must squeeze the sugar cane to extract the juice. Remain summä for the sake of all |
| 367 | நீ எப்பொழுதும் அவனிலே இருக்கின்றாய். அத்துடன் உன்னில் அவன் எப்பொழுதும் இருக்கின்றான். உன்னிடம் இல்லாதது எதுவுமில்லை. | You are always in Him and He is always in you. You lack nothing. |
| 368 | நீ ஒரு பிரம்மச்சாரியோ குடும்பஸ்தனோ என்பது முக்கிய மில்லை. நீ உண்மையை அறிய வேண்டும். | It does not matter whether you are a Brahmächäri or a householder. You must know the truth.It will speak everywhere. |
| 369 | எதனையும் களவெடுத்திராதவனைக் குற்றம் சொல்ல நாம் யார்? | He who has nothing steals. Whom are we to blame? |
| 370 | நீ முற்றும் சரணடைந்துள்ள போது நீ செய்கின்ற ஒவ்வொன்றும தியானம் ஆகும். | When you have entirely surrendered, everything you do that will be meditation. |
| 371 | (ஒரு கூடை மீன் கொண்டு செல்லும் மீனவனைச் சுட்டிக்காட்டி) அவனுடைய பாதங்கள் திருவடி. ஏனெனில், அவனுள்ளே சிவன் இருக்கிறான். | (Pointing to a fisherman carrying a basket of fish.) His feet are Tiruvadi. why? Because Lord Šiva is within him. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ஆம் பதிப்பு | 450.00 |
| 02. | NATCINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ஆம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 250.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 5ஆம் பதிப்பு) | 300.00 |
| 14. | KANDHAPURAANAM | 400.00 |
| 15. | YOGUSWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPRRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOG ASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | சிவஞான சித்தியார் | 500.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாத வசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 250.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 1000.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு. க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82, W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. DOP/News/102/2023

: Arissona Advertising & Publication
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
T.P : 021 222 3222, 076 141 930| www.arissona.com

b) Publisher : S. Manivasakan

c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road , Jaffna, Srilanka.
T.P.:021- 2222799

Date of Publication 01.12.2022

Editor : S. Vinasithamby B.A. (H
Sivathondan Nilayam,
Chenkalady.
T.P: 065 - 2240272


If undelivered please return to:
The Manager , "Sivathondan Nilayam
4, K.K.S. Road, Jaffna, Sri Lanka.




**Public Library**
Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org